பாஸ்

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY.
TIRUVANMIYUR :: MADRAS-41

குமரன் துணை.

# விவேகபாநு.

## ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு—திருக்குறள்.

...கா குதி 6. } 1907 ஹூ செப்டெம்பர். { பகுதி 9.

### விஷயங்கள்.

...பொருட்காட்சி—பத்திராதிபர்.
...ர்ட் கிளைவ்—எஸ். சாமிநாதையர்
...மீனாக்ஷிஸ்தோத்திரம்—பி. எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள்.
...ன்உரம்—பத்திராதிபர்.
ஆயுர்வேதத்தின் வரலாறு—ஓர் ஆயுர் வேதி.
இராஜபக்தி, நீநெறி, ரோஜா, கோதிலாம னம், இரக்கம். } ம. கோபாலகிருஷ்ணையர் அவர்கள்
காதம்பரி—P. R. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள்.
கல்கத்தா கைத்தொழிலாளர் கூட்டத்தில் சுதேசியப் பிரசங்கம் } சுதேசமித்திரன்.
சமாசாரக்கொத்து—பத்திராதிபர்.

சொந்தக்காரர்—மூ. ரா. கந்தசாமிக்கவிராயர்.

பத்திராதிபர் } எஸ். சாமிநாதையர். மூ. ரா. கந்தசாமிக்கவிராயர்.

மதுரை விவேகபாநு அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

...தா ...ா 2] [பத்திரிகை 1-க்கு விலை அணா 5.

## சமாசாரக்கொத்து.

பசுவைக் கறக்கும்போது மடியிலிருந்தும் வயிற்றிலிருந்தும் அழுக்கெ
ட்டுகிறது. இது பாலில் விழுந்தவுடன் கரைய ஆரம்பிக்கிறது. அப்போது
பாலுடன் கலந்து விடுகிறது. ஆகையால் பசுமாட்டைக் கறப்பதற்குமுன்
மடியையும் வயிற்றையும் தொடையையும் வெதுவெதுப்பான வெந்நீரால்சோ
ப்புடன் கழுவி அழுக்கை அமெரிக்கர் எடுப்பார்கள். பின்னும் அழுக்குஇ
லாமல் இருக்கவேண்டுமென்று பால் கறக்கும்பசுக்ட்தொட்டிகளை மூடியா
அடைத்து ஒரு புறத்தில் புனலை அமைத்து அதனடியில் வலைக்கம்பியை
தைத்து உபயோகிப்பார்கள். இவ்வலைமெல் முரட்டுத் துண்டு துணிபே
ட்டு அதன்மேல் மற்றொரு சிறிய புனலைப் பெரிய புனலில் வைத்துக்கறக்
எல்லா அழுக்கும் துணியிலேயே நின்றுவிடும். இவ்வளவு ஜாக்கிரதை எ
எடுத்துக்கொள்ளுகிறார்களென்றால் பசுவின் பாலில் சேரும் அழுக்கினால்
பலவித வயிற்றுக் கடுப்பு, பேதி முதலியன குழந்தைகளுக்குக் கண்
கேடு உண்டாகின்றன.

*　　　*　　　*　　　*

நமது ஜீவனோபாயங்கள் :—[...]ங்கோலில் முதல் கிரேட் ப்ளீடராயி
ரும் மிஸ்டர் T. நாயன சாஸ்திரி சென்னை ராஜதானியிலுள்ள ஜனங்க
ஜீவனோபாயங்களைப்பற்றிப் பின்வரும் கணக்குக்களைப் பிரசுரித்திருக்கி

நமது இராஜதானியிலுள்ள சுமார் 3-கோடி ஜனங்களில் 100-க்கு
பெயர் சம்பாதிக்கிறவர்கள்; மற்ற 46-பெயர் அண்டிப்பிழைக்கிறவர்கள்.

1000-க்கு 5-பெயர் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்.

6-பெயர் வர்த்தகம் செய்பவர்.

7-பெயர் ஒரு தொழிலுமில்லாமல் பிச்சை வாங்கியோ, பென்ஷன் பெற்றோ, சொத்துக்கள் பெற்றோ ஜீவிப்பவர்.

400-பெயர் கிருஷியும் அது சம்பந்தமான வேலைகளும் செய்து பிழைக்கிறவர்கள்.

80-பெயர் பற்பல பதார்த்தங்கள் செய்து விற்றுப் பிழைப்பவர்கள்.

20-பெயர் ஊழியம் செய்து பிழைப்பவர்கள்.

15-பெயர் மூட்டை தூக்கல் முதலான புத்திப்பிரயோகம் வேண்டாத கைவேலை செய்து பிழைப்பவர்கள்—ஆக மொத்தம் 541 பெயர்.

போக பாக்கி 459-பெயரும் சம்பாதிப்பவர்களை யண்டிப்பிழைப்பவர்க
ள். இப்படி மிஸ்டர் நாயனசாஸ்திரி போன ஸென்ஸஸ் கணக்கைப்பார்த்து
எழுதியிருக்கின்றார். தேசத்தில்சரிபாதிஜனங்கள் எவ்விதத்தொழிலும்செய்
யாமல்சோம்பேறிகளாய் ஜீவிப்பது அத்தோமிகவும்பரிதபிக்கத்தக்கவிஷயம்
[...]பெயர்.

உ

குமரன் துணை.

# விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

| தொகுதி 6. | 1907ஸு செப்டெம்பர். | பகுதி 9. |
| --- | --- | --- |

## கல்விப்பொருட்காட்சி.

சென்ற சில ஆண்டுகளாய் நம் காங்கிரெஸை யடுத்துப் பொருட்காட்சியும் நடத்தப்பட்டுவருவதை யெல்லோரும் அறிவர்கள். அதனால் நம் நாட்டுக் கைத்தொழில் அபிவிருத்தியடைய இடமுண்டாயிற்று, எங்கும் தொழிலாளிகளுக்குள் ஒருவித ஊக்கமும் உற்சாகமுமுண்டாயிருக்கின்றது. தேசாபிமானிகள் அனைவருமே இது விஷயத்திற் கவலை செலுத்த ஆரம்பித்திருக்கின்றனர். சுவதேசியம் ஏற்படவே இவ்வுணர்ச்சிக்குப் பேரநுகூலமாயிற்று. ஒத்துக்கு மத்தளஞ்சேர்ந்தாற்போல் இரண்டு மொன்றுகூடவே நாட்டின் க்ஷேமம் அபிவிருத்தியாகத் தொடங்கியிருக்கின்றது.

இம்மாதிரியாகவே கல்வி விஷயத்திலும் ஒரு பொருட் காட்சியேற்பட்டால் மிகவும் அநுகூலமென்று கருதிச் சென்னையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சுதேச கல்விச் சங்கத்தார் சில மாதங்களுக்கு முன் ஒரு காட்சி யேற்படுத்த மிக்க சிரமமெடுத்துக்கொண்டு ஓர் ஏற்பாடு செய்தார்கள். அக்காட்சி இம்மாதத்தில் நடந்தேறியது. ஆங்கிலேய நாட்டினின்றுமே பல பொருள்கள் காட்சிக்கு அனுப்பப்பட்டன. நம்மிராஜதானியின் பலபாடசாலைகளினின்றும் பல பொருள்கள் அனுப்பப்பட்டு எல்லாம் மிகவும் சிறப்பாய் நடந்தன. தக்க நிபுணர்களால் உபந்நியாசங்கள் எழுதிப்படிக்கப்பட்டன. இத்

தியா இலாகாவிலுள்ளவர்கள் ஊக்கங்காட்டியதுமன்றி ஏனையோரும் சிறந்த ஊக்கங்காட்டி உழைத்தனர். ஹானரபில் மிஸ்டர் பி. சிவசுவாமி ஐயர் அவர்கள் அக்காட்சிசாலைத்திறப்பின் சமயத்தில் வெகு அழகான உபந்நியாசஞ் செய்தனர். பொருள்களெல்லாம் அலங்காரமாகவும் அணியணியாகவும் சர்வகலாசாலைக் கட்டிடத்தில் அமைக்கப்பட்டிருந்தன. அனைவரும் சௌகரியமாகவே வந்து பார்த்து [illegible]க்கும் வண்ணம் வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. எல்லாம் இனிது நடந்தன. கண்டோர் எவரும் களித்து ஆனந்த பரவசமாயினர். இதுவே நம் இராஜதானியில் நடந்த முதற் காட்சியாயினும் வெகு சிறப்பாகவே நடந்தது. வருஷா வருஷம் இம்மாதிரியான காட்சி டிஸம்பர் லீவு நாளில் வைத்துக்கொண்டால் பற்பல ஊர்களிலுமிருந்து ஏராளமான உபாத்தியாயர்கள் திரண்டுவந்து கண்டுகளித்துச் சிறந்த பயனை யடைவார்கள். சென்னை உபாத்தியாயர் சங்கத்தவர் இதுவிஷயத்தில் தக்க ஊக்கமெடுத்துக்கொண்டு கவர்ன்மெண்டாரையும் சகாயஞ்செய்யத் தூண்டித் தக்க ஏற்பாடுசெய்வார்களானால் நாட்டின் கல்வி நன்கு அபிவிருத்தியடைய ஏதுவாகும். சென்னையில்மட்டும் வைத்தாற் போதாது. தென்னிந்தியாவின் முக்கிய நகரங்களிலும் நடக்கும் வண்ணம் ஏற்பாடு செய்தால் நலம். சுதேச ராஜாங்கத்தாருடைய உதவியையும் நாடி நடத்துவார்களானால் பின்னும் சீரும் சிறப்புமாயும் நடத்தலாம். கல்வி எல்லாருக்கும் பொதுவாதலாலும் எல்லோரும் ஒருங்குகூடி உழைக்கும்பக்ஷத்தில் உத்தமமான நன்மைகள் பல நம் தேசத்துக்கு உண்டாகி உபாத்தியாயர்களும் அபிவிருத்தியடைந்து நம் சிறுவர்களும் பயன் பெறுவார்கள். இவ்விதக் காட்சிகளைக் கண்ணுறும் உபாத்தியாயர்கள் உற்சாகங்கொண்டு உழைத்துக் கல்வியைச் சீர் பெறச் செய்வார்களென்பது திண்ணம். கல்வி யபிவிர்த்தியாகிறதற்கு இவ்விதக் காட்சிகள் ஒருவித சாதனமாகும். உபாத்தியாயர் சங்கங்கள் ஆங்காங்கு ஏற்பட்டு ஒன்றுகூடி உழைத்து இவ்வுத்தமத்தொழிலையபிவிர்த்தி செய்தால்மட்டுமே நாட்டுக்கு நலமுண்டு. கல்வியில் அபிமானமுள்ள நம் நாட்டார் அனைவரும் இதிலூக்கம் காட்டி உழைக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். தனித்தனியா யுழைப்பதிற் பயனில்லை. ஒன்றுகூடி யுழைக்கும்பக்ஷத்தில் சீக்கிரத்திற் பயனடையலாம்.

கல்வி விஷயமாய் நம் நாட்டார் எத்தனையோ செய்யக்கடமைப்பட்டிருக்கிறார்கள். நம் கல்வியைப்பற்றி நாமே கவலை யெடுத்துக் கொள்ளாவிடில் க்ஷேமம் எப்படி யுண்டாகும். வரவர நம் நாட்டில் தொத்துவியாதிகள் நுழைந்து தீங்கிழைத்து வருகின்றன. சிற்சில வியாதிகள் நிலையாய்க் குடிகொண்டுவிட்டன. அந்நியர்கள் நம் நாட்டைச் சிறுகச் சிறுகக் கைப்பற்றிய விதமே அயல் நாட்டு வியாதிகளும் நம நாட்டில் நுழைந்து பெருந்தீங்கை விளைவித்து நிலையாய் நிற்கத் தலைப்பட்டுவிட்டன. இத்தீங்குகளினின்றும் நாம் விலகிச்சுகமாய் வாழவேண்டுமானால் கல்வியபிவிர்த்தியை ஊக்கத்துடன் நாடவேண்டும். சுகாதாரங்களைப் போற்றவேண்டும். கல்வியறிவில்லாமல் நன்மை தீமைகளை நாம் எளிதில் அறியமுடியாது. நம் தர்மங்களைத் தவறாமல் நடத்தவேண்டும். அந்நிய நாட்டுத் தர்மங்களை அனுஷ்டிப்பதில் கண்ணுங் கருத்துமாக இருந்து நன்மையானவற்றை மட்டும் கைக்கொள்ளலவேண்டும். அந்நிய நாட்டு அதர்மங்களையெல்லாம் நாம் நம் ஆசாரத்தில் நுழையவிட்டு அஜாக்கிரதையுடன் இருந்துவருகிறோம். அதனால் நம் மேன்மையான தர்மங்களெல்லாம் கெட்டு அடியோடே தொலையத் தலைப்பட்டன.

அது போலவே வித்தியாபிவிருத்தி விஷயத்திலும் அந்நிய நாட்டு வழிகளையே அநுசரித்துக் கெட்டுப்போகவேண்டுவதில்லை. அவைகளிலும் நன்மையானவற்றைமட்டும் அநுசரித்துக்கேடானவைகளை விலக்கிவிடவேண்டும். நம நாட்டுப் பழைய மாதிரிகளெல்லாம் பயனற்றவையென்று நாம்முற்றிலும் ஒழித்துவிடுதல் கூடாது. அவைகளில் எத்தனையோ நல்ல விஷயங்கள் இருக்கின்றன. ஆகையால் எது நன்மை செய்யுமோ அதனைத்தேடி அநுஷ்டித்து அபிவிருத்தி செய்தல்வேண்டும். அவ்வாறின்றிப் புதுமாதிரியே நன்மை பயக்கத்தக்கது என்று மதிமயங்கி வீணில் நம் ஸ்வதர்மத்தை இழக்கவேண்டுவதில்லை. நம் நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூற்றிரண்டு பேர்களுக்கு எழுதப்படிக்கத் தெரியாது. இவ்வாறான அந்தகாரத்தில் நாம் மூழ்கியிருக்கிற வரை நம தேசம் முன்னுக்கு வருவதெப்படி? பள்ளியிற் படிக்கத்தக்க சிறுவர்கள் அனைவரும் பள்ளியிற் படித்தாலன்றோ நாட்டின் கல்வி யபிவிருத்தியாகும். நூற்றுக்கு எழுபத்தெட்டுபிள்ளைகள் படிப்பில்லாமலிருக்கிறார்கள் என்பதைக் கேட்கப்பரிதாபமாக இருக்கிறது. ஆகையால் நம் நாட்டின் புத்திமான்கள் அனைவரும் இதுவிஷயத்தில் ஊக்கங்காட்டி ஒற்றுமையுடன் உழைத்து வருவதோடு உபாத்தியாயர்களும் தங்கள் வேலையைத் திறமையுடன் செய்து வருவார்களானால் நாடு க்ஷேமமடையு மென்பதிற் சிறிதும் ஐயமில்லை. உபாத்தியாயர்களைத் திறமையுடையவராகச்செய்வதற்குக் கல்விப் பொருட் காட்சி சிறந்த சாதனமே.

பத்திராதிபர்.

# ராபர்ட் கிளைவ்.

[172-ம் பக்கத்தொடர்ச்சி.]

கிளைவ் துன்பப்பட்டுக்கொண்டே இரண்டு வருஷகாலம் கழித்தானென்று கூறினோம். அவன் அவ்வாறான நிலைமையிலேயே இருக்கவில்லை. அவன் இந்தியாவுக்கு வந்துசேர்ந்த வருஷமே ஆங்கிலேயருக்கும் பிராஞ்சுக்காரர்களுக்கும் ஐரோப்பாவில் யுத்தந்தொடங்கிற்று.

இந்தச் சமயத்தில் இந்தியாவில் இவ்விரு ஜாதியாருமிருந்த நிலைமையைச் சிறிது ஆராய்வோம். ஆங்கிலேயர் சந்திரகிரி ராஜாவினிடமிருந்து 1639-ம் வருஷத்தில் சொற்பநிலம் வாங்கி அதில் ஒரு பண்டசாலை கட்டி அதற்கு ரக்ஷணையாக ஒரு சுவரெழுப்பி அதற்கு செயிண்ட் ஜார்ஜ்கோட்டையென்று பெயருமிட்டார்கள். ஆனால் கர்னல் மாலிஸன் என்பவர் ஆங்கிலேயர் 1632-ம் வருஷம் பிஸ்நகர் இராஜாவினிடமிருந்து சிறிதுநிலம் வாங்கினார்களென்றும் அதற்குச் சுதேசிகள் சென்னபட்டணம் என்று பெயரிட்டார்களென்றும் ஆனால் பிறகு ஆங்கிலேயர் அதனை மதிராஸ் என்று அழைத்தார்களென்றும் கூறுகின்றனர்.

ஆனால் அவர்கள் வியாபாரம் செய்து இலாபம் சம்பாதிப்பதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்தார்களேயொழியச் சுதேச அரசர்களுடைய கலகங்களில் தலையிட வேண்டுமென்றாவது ராஜ்ஜியம் சம்பாதிக்கவேண்டுமென்றாவது சிறிதும் ஆசைகொள்ளவில்லை. தங்கள் நிலத்துக்குத் தாங்கள் செலுத்தவேண்டிய தீர்வையைக் கர்னாடக நவாப்புக்குச் செலுத்தி அவர்களது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்துவந்தார்கள். பிரான்ஸியரும் வியாபாரத்துக்கே வந்தவர்களாயினும் அவர்கள் அம்மட்டோடே நிற்கவில்லை.

சென்னைக்குத் தென்மேற்கே 68 மைல் தூரத்தில் பிரான்ஸிய வியாபாரிகளுக்குத் தலைவனான பிரான்ஸிஸ் மார்டின் என்பவன் பீஜப்பூர் அரசனிடமிருந்து 1672-ம் வருஷம் புதுச்சேரியென்ற ஒரு கிராமம் விலைக்கு வாங்கினான். பிறகு அதை விசாலமாக்கி அழகு

படுத்தினன். இதுவே பின் பிரசித்திபெறுவதாயிற்று. மார்டினது ஜீவகாலம்வரையில் பிரான்ஸியர் வியாபாரத்துறையிலேயே கண்ணுயிருந்துவந்தார்கள்.

இவன் 1706-ம் வருஷம் இறந்துபோகவே இவனுக்குப்பின் வந்த மான்ஷியர் மோஸ் என்பவன் பிரான்ஸியரின் தலைவனுனன். இவன் சாமர்த்தியசாலி. சுதேச அரசர்களுடன் உறவாடுவதிலும் அவர்கள் யுத்தத்தில் தலையிடுவதிலும் அவர்களிடமிருந்து பூமியோ பொருளோ சம்பாதிப்பதிலும் கருத்தாயிருந்தான். இவன் போட்ட விதைதான் இவனுக்குப்பின்வந்த டூப்ளேகாலத்திற் பலனளித்தது.

டூப்ளே சுதேசிகளின் நடையுடை பாவனையை நன்கு அறிந்தவன். இவன் மனைவிக்குச் சுதேசபாஷைகள் தெரிந்தமையால் அவை அவனுக்கு அநுகூலமாயின. அதனுல் அவன் சுதேசிகளிடத்தில்நன்கு பழககேர்ந்தது. ஐரோப்பியர் சுதேசிகளுடன் கூடிக்குலாவி அவர்களுடைய உட்கருத்தை நன்கு அறியவேண்டுமானுல் அவர்கள் பாஷையை நன்கு அறிதல் பெருஞ்சாதனமாகும். இதனைப் பாதிரிகள் நன்கு அறிந்து பயனடைந்து வருகிருர்கள். முற்காலத்தில் ஸிவில் உத்தியோகஸ்தர்கள் அவ்வாறே செய்துவந்தனர். குடிகளுக்கு அதனுல் எத்துணையோ நன்மைகள் உண்டாயின. தற்காலத்திலோ அவ்வழக்கம் மிகவும் குன்றிவிட்டது. ஐரோப்பிய ராணுவ உத்தியோகஸ்தரைக்கொண்டு சுதேசிகளைப் பழக்கினுல் அவர்களும் ஐரோப்பியர்களைப்போலவே நல்ல ராணுவவீரராவார்கள் என்பதை முதல் முதற் கண்டுபிடித்தவன் டூப்ளே. அதனுல் அதிக செலவில்லாமற் சேனை சேர்த்து வந்தான். ஆங்கிலேயர் இம்மாதிரிவழக்கத்தை மிகவும் பிற்காலத்திலேயே அநுசரித்தனர். ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரான்ஸியருக்கும் யுத்தம் தொடங்கவே இந்தியாவிலும யுத்தம் நடக்குமென்று அங்குள்ள ஆங்கிலேயரும் பிரான்ஸியரும் எதிர்பார்த்தனர். ஆங்கிலேயருக்கு அவர்கள் நாட்டினின்றே யுத்தஞ்செய்யும் வண்ணம கட்டளை பிறந்ததுமன்றி அதற்கென்று சேனையும் வந்திறங்கிற்று. டியூப்ளேக்கு யுத்தஞ்செய்யச் சிறிதும் மனமில்லாமல் ஆங்கிலேய கவர்னருக்குத் தூதனுப்பி யுத்தத்தை ஒழித்துவிட வகைதேடினுன். ஆங்கில கவர்னர் அதற்குச் சம்மதிக்கவில்லை.

டியூப்ளே உடனே தனக்குச் சமீபத்திலிருந்த தன்னாட்டானாகிய லாபோர்டனே என்ற போர்வீரனைச் சேனையுடன் அழைப்பித்தான். அவ்வீரனும் வந்த அன்றே ஸெயிண்ட்ஜார்ஜ்கோட்டையைமுற்றுகையிட்டுப் பிடித்தான். ஆங்குள்ள ரணவீரர்கள் அனைவரும் அவன் வசமாயினர். அவனும் பொருள்கொடுக்கும் பக்ஷத்திற் கோட்டையைவிட்டுவிடுவதாகச் சொன்னான். இந்த ஏற்பாடு இவனுக்கு மேல் அந்தஸ்திலிருந்த டியூப்ளேக்குச் சம்மதமில்லை. அவன் எல்லோரையும் கைதிகளாக்கிப் புதுச்சேரிக்குக் கூட்டிப்போய் அவ்வூர் தெருவழியாக அவர்களை நடத்தி அவமானப்படுத்தினான். அப்பொழுது கிளைவ் சென்னையிலிருந்தும் இத்துன்பத்துக்குள்ளாகாமல் தப்பித்துப் பக்கிரிவேஷம் போட்டுக்கொண்டு தன் நண்பன் எட்மண்ட் மாஸ்கிலேன் என்பவனோடு புதுச்சேரிக்கு 14 மைல் தெற்கேயிருந்த ஸெயிண்ட் தாவீது கோட்டைக்குக் கால்நடையாய்ச் சென்றான். அவ்விடத்திலேயே அவன் இரண்டு வருஷகாலம் கழித்துவந்தான். அங்கு அவனுக்கு அதிகவேலையில்லாமையால் சாவகாசமான காலமெல்லாம் சீட்டாடுவதிற் கழித்துவந்தான். ஒரு கால் அவன் ஒரு ரணவீரனோடு சீட்டாடுகையில் தன்னை அவ்வீரன் மோசஞ்செய்ததாகக் (கிளைவ்) கூறினான். உடனே அவன் துப்பாக்கி கைக்கொண்டு சண்டைக்கு அழைத்தான். சண்டையிடுகையில் கிளைவ் தன் சத்துருவைச் சுடவே குறிதவறிவிட்டது. உடனே சத்துரு அவனை நெருங்கி அவன் தலைக்கு நேராகத் தன் கைப்பிரங்கியைப் பிடித்துக்கொண்டு அவனை உயிர்ப்பிச்சை கேட்கும்படி சொன்னான். கிளைவும் அவ்வாறே வேண்டித் தன் உயிரைக் காப்பாற்றிக்கொண்டனன். அதன்மேல் அவன் சத்துரு தன்னைப் பழிகூறியது தப்பிதம் என்று அவனைச் சொல்லச்சொன்னான். அப்பொழுதும் சொல்லமாட்டேன் எனவே சத்துரு அவனைச் சுடுவதாகப் பயமுறுத்தினான். "சுடு. நீ வஞ்சித்தாயென்று நான் சொன்னேன். இன்னும் அதையே சொல்லுகிறேன். கொடுக்கவேண்டியதை ஒருகாலும் கொடேன்" என்று மறுமொழி கூறினான். எல்லோரும் கிளைவைத் தைரியத்திற்காகப் புகழ்ந்து பேசினார்கள். ஆனால் ஒருபொழுதும் அவன் அந்தச் சத்துருவுக்கு முன்வரச் சம்மதிக்கவில்லை. சீட்டாடுங்காலத்திலும் அந்தச் சந்தர்ப்பத்தைப்பற்றி அவன் பிறகுபிரஸ்தாபிக்கவேயில்லை. "அவன்

எனக்குப் பிராணனை அளித்தவன். அவனுடன் இனிச் சிநேகம் பண்ண எனக்கு விருப்பமில்லையாயினும், அவன் அநியாயமாக ஜயித்த பணத்தைக்கொடுக்கப் பிரியமில்லையாயினும், அவனுக்கு நான் ஒரு நாளும் தீங்கிழையேன்" என்று சொன்னான். இதே சங்கதியைப் பிரௌனிங் கவிஞர் "கிளைவ்" என்ற தமது கவியில் அவன் தன் உயிர்ப்பிச்சை கேட்ட சங்கதியைத் தவிர்த்து மற்றவற்றைத் தெளிவாகக்கூறியுள்ளார்.

1748-ம் வருஷத்தில் ஆங்கிலேயர் புதுச்சேரியை முற்றுகை போட்டார்கள். கிளைவ் சொற்ப காலம் பட்டாளத்தில் ஒரு சிறு பகுதிக்கு அதிபதியானான். அச்சமயத்தில் மருந்து கொணரத் தன் இருப்பிடத்தைவிட்டுச் சிறிதுநேரம் வெளியேபோயிருந்தான். அது விஷயமாய் இவனுக்கும் வேறொரு உத்தியோகஸ்தனுக்கும் தர்க்கமுண்டாயிற்று. அந்த உத்தியோகஸ்தன் கிளைவ் அவ்விடம் விட்டுப்போனது பயத்தினாலே யொழிய ஊக்கத்தாலன்று என்றான். இதுவிஷயமான வாக்குவாதத்தில் அந்த உத்தியோகஸ்தன் கிளைவைக் கைநீட்டியடித்துவிட்டான். உடனே அவனைச் சண்டைக்கழைத்தனன். சண்டைக்கு இடம்கொடாமல் மேலதிகாரிகள் விசாரணை செய்தார்கள். அந்த உத்தியோகஸ்தன்மேல்குற்றம் ஏற்பட்டது. அதற்காக அவன் கிளைவைப் பட்டாளத்தின்முன் மன்னிப்புக்கேட்கும்படி உத்தரவு பிறந்தது. ஆனால் அடித்ததின் விஷயமாய் நியாயாதிபதி யாதொன்றும் மேல் நடத்தவில்லை. முற்றுகை முடிந்தவுடன் அதுவிஷயமாய்க்கிளைவ் தூண்டிப்பார்த்தும்மறுதலித்துவிட்டார்கள். கிளைவ் தனக்கு தீங்கிழைத்த உத்தியோகஸ்தன் தலைக்குநேரே தன் பிரம்பைப் அசைத்துக்காட்டி "நீ ஒரு பெரிய கோழை. என் கையில் நீ அடிபடக்கூட யோக்கியதை இல்லாதவன்" என்றான். மறுநாளே அந்த உத்தியோகஸ்தன் வேலையைவிட்டு நீங்கிப்போய்விட்டான்.

போர்ட்ஸெயிண்டுடேவிட் கோட்டையிலிருக்குங்கால் நடந்த மற்றோர் சங்கதியும் விநோதமாயிருக்கும். அஃதாவது:—

பார்டிஸ் என்ற ஒரு பாதிரியாரிருந்தார். அவர் கிளைவைக் கோழைத்தனமுள்ளவனென்றும் பரமதுஷ்டனென்றும் சிலர் முன்

சொன்னதாகக் கிளைவின் காதுக்கெட்டியது. மிஸ்டர் வெல்ஷ்மேயலன் என்ற தகுந்த உத்தியோகஸ்தர்முன்னிலையில் அந்தப்பாதிரி தன்னைப் பார்த்து பிரம்பை அசைத்ததும் காப்டன் கோப்பினிடம் அதேமாதிரி தன்னைப்பற்றிப்பேசிக்கொண்டிருந்தபொழுது தன் எலும்பை ஒவ்வொன்றையும் முறித்துவிடுவதாகச் சொன்னதும் கிளைவுக்குக் கோபத்தையூட்டின. கிளைவ் அவனைக் கூடலூரில் கண்டபொழுது அவன் பேரில் கடுங்கோபங்கொண்டு அவனைத் தன்பிரம்பால் இரண்டு மூன்று அடிஅடித்தான். பாதிரியும் இவனை அடிக்க இருவருக்கும்சண்டைமூண்டது. காப்டன் லூகாஸ்என்பவர் அதனைஉடனே விலக்கிவிட்டனர். அதைப்பற்றி நடந்த விசாரணையில் கிளைவ் செய்தது பொறுக்கமுடியாத கோபத்தாலென்றும் அந்தப்பாதிரி செய்ததே தப்பிதமென்றும் தீர்மானித்ததுந் தவிர அதை விசாரணைசெய்தவர்கள் கிளைவ் இயற்கையாய்ச் சாந்தமுள்ளவனென்றும் துஷ்டத்தனத்துக்குப் போகிறவனல்லனென்றும் எழுதியனுப்பியிருக்கிறார்கள். இது பொதுவாய்க் கிளைவைப்பற்றிச்சொல்லப்படுகிற குணங்களுக்கு மாறாக இருக்கின்றது. மேற்குறித்த சம்பவங்களிலிருந்து சரித்திரக்காரர்கள் கிளைவின்குணத்தைப்பற்றிப் பற்பலவிதமாக அபிப்பிராயப்படுகின்றனர். மில் என்பவர் கிளைவ் தன்னோடு சேர்ந்தவர்களுடன் எப்பொழுதும் கலகம் பண்ணுகிறதே வழக்கமென்கின்றனர். மிஸ்டர் கிளீக் என்பவர் கிளைவையே குற்றங்கூறுகிறார். ஆனால் லார்ஜான்மால்கம் மட்டும் கிளைவின் செய்கைகள் குற்றமாகாவென்றும் தைரியத்துக்கு அறிகுறிகளென்றும் கூறுகின்றனர். எவ்வாறிருப்பினும் இப்பருவத்தில் கிளைவ் பிடிவாதமுள்ளவனென்பதும் பெருந்தகைமை வாய்ந்தவனல்லன் என்பதும் நம் கருத்து. ஆனால் அவன் தைரியத்தை எவரும் வியவாமலிரார்.

புதுச்சேரி முற்றுகை தவறிவிட்டது. அதன்பின் கிளைவ் மறுபடியும் வியாபார விஷயமாகவே வேலைபார்க்க நேர்ந்தது. புதுச்சேரி முற்றுகைச்சந்தர்ப்பத்திற்றான் கிளைவின்சாமர்த்தியம் மேஜர் லாரன்ஸுக்குத் தெரியவந்தது.

(இன்னும் வரும்)

எஸ். சாமிநாதையர்.

உ

# ஸ்ரீ மீனாக்ஷிஸ்தோத்திரம்.

எழுசீர்க் கழிநெடில் விருத்தம்.

நிறைவுற் றகன்ற கடலைக் கரண்டி
நிறைவைத் தளக்க நினைவோர்
முறையொக்கு மூன்ற னியல்பைத் தொகுக்க
முயலல் செறிந்த பொறியின்
சிறையுற்ற வென்ற னறிவுக் குகந்து
தெரிவிப்பை யுய்பு முறையை
கறையுற்ற கண்டர் மிசையிற் பொலிந்த
கயலொத்த கண்ணை யுடையாய். 1

முறைவே றிலாது நினையே நினைந்து
மொழியுந் தவத்தி லமர்வோர்
குறையொன்று காண்ப ரிலையென் றுரைத்தி
குறியென்ன பொய்த்த வுரையா
மறையுந் துறந்த மனமுந் திரும்ப
வழியற்ற போத நிலையும்
நிறையுஞ் சுகத்தி னுருவே யுரைப்பை
நெறியொன்று சேர்க்க னிதியே. 2

மாசற்ற நின்ற னுறவொன்றை நாடி
மகிழாது ஞால வுறவின்
பாசத் தழுந்தி நிலையொன் றிலாது
பலவாறு பொய்த்த பொறியின்
மோசத்து ளேங்கு மெளியேன் றிருந்த
முறையொன் றுரைப்பை வெகுளார்
நேசத் தமர்ந்து விலகாத போத
நிலையே கயற்க ணெழிலே. 3

மறையுட் சமைந்து பொறைபெற் றமர்ந்த
மதியர்க் கிசைந்த வமுதே
குறையுற் றகன்ற கடலொத் திடும்பு
குழுவிப் பவத்து முழுகித்
துறைபற்றி யேறு நெறிபெற் றிடாது
துயரத் தழுந்து மெளியேன்
கறையற் றிடாது தெரிவித் துரைப்பை
கயலொத்த கட்க ணகமே. 4

காமாதி மூழ்கி யேமாறி னைந்து
கதியற்று நின்ற னடியெண்
ணாமூட நெஞ்ச மோவென்னை நாளு
நலிவிக்க வான துயரம்
போமா றிசைப்பை யோமீளு மாறு
புகலா தகற்ற வுளமோ
மாமேவு சம்பு வாமாங்க மொள்ளு
மணியே கயற்கண் வடிவே. 5

விடாத பந்த மோடாசை கொண்டு
மெலிவுற் றலைந்து புவியில்
கோடானு கோடி நினைவிற் சிதைந்து
குலைவுற்ற வென்னை யினியிப்
பாடேது மின்றி நீடூழி வாய்ந்த
பழமைப் பவப்பு ணரியின்
மேடேறு மாறு தனையின் றுரைத்து
விடுவிப்பை மீன விழியாய். 6

மண்ணாசை வாழு மனையாசை மாதை
மருவாசை பொன்னை வரமென்
றெண்ணாசை மெய்யி னிடமாசை புக்கி
யிழுபட்டு நொந்து புகலற்

கொண்ணாத வாறு திரிவுற்ற பேதை
யுணர்வோடு நாளு மெளியேன்
புண்ணாதல் நீங்க வருள்வாய் நிறைந்த
பொருளே கயற்க ணருளே. 7

இல்லாத தொல்லை யினிமேலோடி யாதி
யிமையிற் குளாகி நிலையாய்
நில்லாத வாழ்வை நிலையென் றுணர்ந்து
நெறியற்ற வேழை யெனையோர்
சொல்லா விருத்தி வினையா லமைந்த
துயரத்தை நீக்கி யருள்வாய்
கல்லாத சிந்தை கருதா தொளித்த
கவடே கயற்க ணவளே. 8

ஓடாத சிந்தை புலவாது நோக்க
லுனையோத லின்றி மறுசொற்
கூடாத நாவு வினவாத கேள்வி
குறையற்று நின்ற னருள்கை
வீடாத வாழ்வு பெறமுன்பு பூசை
வினையேன் புரிந்த திலையா
வாடாத போத மலரே யுரைப்பை
வழியொன்று மீன விழியாய். 9

மின்னுடை சுற்றி யணிபூண்டு நாறு
விதழூட்டி யன்பு மிகவிப்
பன்னுடை போன்ற வுடலைச் சுமந்து
பலகாலு நைந்து நிலையாப்
பொன்னோ டிழிந்த புவியோடு பொய்த்த
மொழியோடு கூடி கவியா
துன்னோடு தூய்மை புளரோடு நிற்க
வுதவாய் கயற்க ணருளே. 10

### எழுசீர்க்கழிநெடில் விருத்தம்.

### வேறு

கானலாறுநதிமூழ்கியோர்மலடிமகக்குழந்தைககனத்துமீ
தானதன்மலரணிந்துநன்முயலளித்தகொம்பமைதனுத்தரித்
துனமின்றிவிளையாடினனெனவுரைக்குமாறுபுவியுறவிலனும்
கானமூர்த்தமெளியேனையன்பினொடுகாப்பதுன்கடமைசேற்கணாய். (1)

தந்தைதாய்மனைவிமைந்தர்தந்தமதுசாதகத்தைநினையாதருச்
சொந்தமோடணையுவந்திடாதநெறிதோன்றிடாதடிமைபோன்றியான்
நிந்தையாமுறைபுகுந்தவாவொடுநினைந்ததொழாதுபிறவித்துயர்ப்
பந்தமீதமருமந்தவென்னைவிழிபார்க்கிலென்கயலினோக்கினாய். (2)

கற்றிடாதமதிபற்றியேறுமுறைகாணிடாதமதிகோணுமா
றற்றிடாதமதிசுற்றமீதடிமையானபேதைமதிராவெனுங்
குற்றமுள்ளமதிசற்றுமுன்னினைவுகொண்டிடாமதிதிரண்டியான்
நிற்றபுன்கசடகற்றவோர்முறையையீசைப்பைகயலேய்க்கணாய். (3)

இன்மைபோயினுள்வன்மையோடுசிறிதிலைகையின்றியனைதோகையார்
புன்மைமீதுவிழுதன்மைகொண்டுமனைபொருளெனும்பெரியவிருளதிற்
சன்மமூழ்கியிழிகன்மமேயெனதுசரிபெனிற்கருணைபுரிவையோ
பன்மையின்றிநிறைசின்மயத்துரியபான்மையேதிகழுமீன்கணாய். (4)

அன்னையுந்திவிழுமுன்னமிவ்வுலகினாசையோடுமதிமோகமாய்
முன்னமைந்தவினைதன்னுளாகியொருமுடிவிலாதலையுமடிமையேன்
பொன்னவாவொடிடைமின்னர்பந்தமொடுபொய்த்தகாயமதைநித்தமென்
றுன்னுநாயனிழிபுன்னியல்புடைமையொழிவதென்றுகயல்விழியினாய். (5)

கேடமர்த்தமதியோடலைந்துழுழுகிபவக்கடலினிடைபுகுந்
தோடுகானலைதநாடுநவியதையொத்துவித்தமனநத்தியான்
தேடுமுன்புபோடுகோடியெனதிடநிறைந்தகொடுமிடிமைபோய்க்
கூடியன்பருறவாடிவாழுமுறைகூறுவாய்கயலைநேர்கணாய். (6)

நூல்வலார்களொருகாலியம்பிடினுநுட்பமுன்னுமுயர்கற்பிலாத்
தூலமானவறிவாலடர்ந்துநிறைதுயர்மலிந்தவுடலியல்புளேன்
காலனின்றுவருமோவெலையென்னையமழகணமெரிந்துபடுபிணமெனுங்
கோலமின்றலைதுபாலுவக்குநெறிகுறிகயற்பொலிவுநிறைகணாய். (7)

துஞ்சுபோதகலமிஞ்சுபோதுனதுதூயபொன்னடியினேயமாய்
வஞ்சமின்றிபுனைநெஞ்சிலேகருதிவாழ்த்தியும்பிறவிபாழ்த்தியான்
அஞ்சிகொர்த்துபிரபஞ்சநோயதிலழுந்தவைப்பதுபொருந்துமா
விஞ்சைமெல்லியரிறைஞ்சுதேவதருவேகயற்கணிறைதோகையே. (8)

பாடுபட்டுணவுதேடியிட்டுவினைபயிலவைத்தறியமுயலுளத்
தோடுநூல்பலவுநாடியுய்யுமுறைமுன்னுமுன்னரிடைதன்னிலிக்
கூடறத்தனதூரபெற்றவளைமுகூற்றினுக்குமறுமாற்றமொன்
றுடியானெனக்குகேடகற்றவருள்வாய்நெடுங்கயலையேய்க்கணாய். (9)

தானமின்றிநிறைவானமின்றியொருசடமுமின்றியனுவிடையெழுந்
தானபூதகுணமீனுகாமவுருவைம்பொறிக்குமயலென்பதா
மோனமின்றமதிதேனெனப்பருகுமோதமேயுடலுபாதியை
நானெனக்கருதுமீனனென்றனினைநண்ணல்சேலனிகர்கண்ணினாய். (10)

## III. அறுசீர்க்கழிநெடில் விருத்தம்.

பெற்றவிடமும்பொருளும்பேதையருமன்பரெனப்பேர்கொண்டென்னைச்
சுற்றியமரும்பலருமிவ்வுடலும்போம்வழிக்குத்துணையாமென்றே
கற்றதெலாமன்னவர்க்கேவியமாக்கிநின்னடியைக்கருதிவாழாச்
சிற்றறிவன்யான்பிழைக்கமுறையுண்டோமாமதுரைசேர்கண்ணுளே. (1)

சொன்னதுகேளாமனத்தின்கூட்டுறவால்யானடைந்ததுயரந்நாவால்
இன்னபடியென்றுரைக்கவேலாதுதென்மதுரையிறைவனோர்பால்
துன்னுபசும்பொற்கொடியாஞ்சேல்விழியுன்சேவடியைத்தொழுதிடாத
தென்னவினையாற்பாண்டிமன்னர்குலச்செல்வமெனவிசைந்தகண்ணே. (2)

வண்டலரும்பூங்குழலைமாமறையுங்காணுதவமுதைக்கோலங்
கொண்டமருநீல்வடிவக்கோதையையங்குவமையிலாக்குணத்தின்வெற்பை
அண்டர்குலத்தேவைமதியாமணியைச்சேல்விழியையாற்றிவாழக்
கண்டறியாப்புன்மனமேபண்டுவினையென்புரிந்தாய்காண்கிலேனே. (3)

ஓடித்திரிந்ததெலாமோருணவுக்கல்லால்வேறுயர்ந்தபேற்றை
நாடிப்புரிந்தசெயலொன்றுவதோவுடலெடுத்தநாளாயேங்கி
வாடித்திரிந்தலைந்துபெற்றபயனென்னேமெய்மறைகளுன்குத்
தேடித்திரண்டொலிக்குங்காஞ்சனமேகயனயனத்திருவாமன்பே. (4)

உன்னடியேத்திப்புகலாப்பாட்டினுக்குமுறையுண்டோவுணர்தலுண்டோ
பின்னதற்கோர்பண்ணுண்டோசெறிவுண்டோவுயிரொழிந்தபிணத்துக்கா
தன்னெடுபின்பொன்னணியும்பஞ்சணையுஞ்சந்தனமுந்தானேன்மன் [ஷட
மன்னவேனவன்பரெலாமாகவமைக்குங்கயலாய்வாய்ந்தகண்ணே. [னர் (5)

உனையோதற்கவலரிஞ்ஞமையர்மேலாம்பெருமைபுரைகின்காதை
நினைவினவாக்காதுண்டயாநித்செவிடர்மாண்புனருன்றுள்கண்ணுற்றே

மனமகிழாரிற்குருடர்வாழ்வுற்றபேரன்றேமறைகளாயுங்
கனவொளியேபுனிதமுளார்கண்மணியேமின்மணியாங்கயற்கண்பேதே. (6)

வினைமூண்டுநோயெழுமுன்விக்குளாகோவுலர்ந்துமெலிந்துநோமுன்
கனைகாலன்கூடவிடுமுன்னேகிடுமுன்பெண்சுதர்கதறிநீரால்
கனையாமுன்றூக்கிடுமுன்தீயிடுமுன்சென்றதனைவிழுமுன்னர்
உனையோதியானுவக்குமுறையுரையாய்வார்கயலாயொளிக்குங்கண்ணே. (7)

இப்புவிவேண்டேன்விசும்புயான்வேண்டேன்நிதிவேண்டேனிளமை
வேண்டேன், கைப்புறையின்னூர்வேண்டேன்உடல்வேண்டேன்வினைவே
ண்டேன்க்ருத்தும்வேண்டேன், செப்புமொழியும்வேண்டேன்உன்னருள்சித்
தச்சிதரூர்திவலைவேண்டி, லப்பொழுதுமிப்படியாபோராட்டஞ்சேல்நயன
த்தன்பினளே. (8)

கல்லாமையுன்கழலைக்கருதாமைகருதிடினுங்கருத்தாழ்ந்தி
நில்லாமைநிலையுளதுநிலையாமைநின்பெயர்வாய்நிறையாவாற்
சொல்லாமைசூழ்வினையைத்தொலையாமைதுறவாமைசுகத்தைநாடல்
அல்லாமையென்றொழிந்தியான்வாழ்தலோகயல்தோய்ந்தமைந்தகண்ணே.

பொருளெனவேபொருளல்லாப்பொருளையெலாமுன்னிடுமிப்புலையநெ
ஞ்சின், மருளகற்றமுறையிலையாபொறையிலையாவன்பெனவேவாழ்த்துநின்
பால், அருளிலையாவென்வினையிங்கறவிலையாவுன்கழலுக்காளல்லேனு, விரு
ள்கனியும்பூங்குழலேமாங்குயிலேசேல்விழிகொண்டிலகும்பேதே. (10)

பொன்னாசையென்றுவிம்புகழாசையிற்றிரிந்துபோவதெந்நாள்
மின்னாசையாமொருபேயென்றழியுஞ்சாருமுடல்மெலிந்திடாது
நின்னாசைவிட்டொழிவதில்லைகயற்கண்ணமுதேதெவிட்டாத்தேனே
உன்னாசையோன்றுகனிந்தென்றெழுமோஎன்னறிவில்லுரைசெய்வாயே. ()

நீராடியும்பிறகுசேறணிவாரோவினையாளினைந்துபின்னர்
தீராதபுன்வினைவந்துற்றிடவென்னீதியுனைச்சிறிதாய்த்தேபின்
போராவொஞ்சைதனில்வீழ்ந்துலைவேன்காமுறுவேன்பொருளைநாடிச்
சோராதலைந்திடுவேன்உய்முறையேதோகயலாய்த்தொகுத்தகண்ணே. (12)

பட்டதுபோதுந்துயரமிங்கினிமேலுந்துயரப்படவொண்ணாது
மட்டகலவென்பொறியால்யானடைந்தவெத்தனைவிவ்வாறிலக்கே
கெட்டிலதவெத்தனைநான்நின்கருணையானடைதற்கிலையோநீ இ
கட்டமுகுவாய்த்துலகைப்பேணவெனவத்தகயற்கண்ணினளே. (13)

கொடுப்பதுநீகொள்வதுநீமதிமகிழ்வைப்பதுநீகுலைத்துநோக
விடுப்பதுநீயுய்முறைகாட்டுங்குருநீயம்முறையென்விழிக்கெட்டாது
தடுப்பதுநீயென்பொறிநீயென்னுயிர்நீஎப்பொருளுந்தானாய்ச்சென்னி
எடுப்பவகையின்றியெனைவைத்ததுநீசேல்விழிவாய்த்திலகுமன்னாய். (14)

எத்தனைகாலந்தொடருமென்வினைகளுந்தனையானிறைஞ்சிவேண்டல்
அத்தனையுமித்தகையாமாவுனதுதண்கருணைக்காளல்லேனோ
பித்தனிவனென்றெனையுங்கைவிடவாவுன்றனுளம்பிறைநுதலெங்கள்
நித்தனையிற்காப்புரப்பிக்கவருள்செய்தகயல்நிகர்த்தகண்ணாய். (15)

கண்டவருஞ்சொல்லவொணாக்கருணைநிதியாமுனதுகழலையேத்த
உண்டுறங்கலல்லால்வேறொன்றுமறியாதவெனக்குளதோமாண்பு
பண்டுவினைகாயவுனைப்பகலிரவாயென்னான்யான்பகர்தனில
கண்டனுளங்கண்டசுவைக்கண்டெனவாய்த்திட்டகயற்கண்ணினளே. (16)

புல்லுடலுமென்னளவும்போதமிலாநெஞ்சமுமைம்பொறியும்நோகக்
கொல்லுலகவாஞ்சையுமோர்கூற்றெனவேவாய்த்தமனக்குரங்குகாமம் [ச
மெல்லியர்கூட்டும்பொருள்செய்விச்சையுமோர்மிடிமையுநீவிதித்தின்றெனை
செல்லமுறையின்றியமைத்திட்டவென்னேபுகல்லவசேற்கண்மின்னாய். ()

எத்தகையோவென்பாவமிவ்வுடலுக்காவதினின்றெழும்புன்னோய்க்கா
சித்தமிலாவென்னறிவுபோம்வழியிற்காகருதித்தொடரும்பேயாம்
வித்தமுதுக்காமிடிமைக்காமயலுக்காவெளியேன்மெலிந்தாளாக
வைத்தனையிம்மூவுலகும்பெற்றவைகாணாதுமறைமறைசேல்கண்ணாய். (18)

எங்குமிலைஎன்போலுமீகையிலேன்சோகமுளேனிழிகாமாதி [தாய்
பொங்குமதியேன்தீதியேன்போதமிலேன்புன்மையுளேன்புகலொன்றோ
கங்குலிருளும்முகிலுங்காரரவும்சேரளியும்கசடர்நெஞ்சும்
பங்கமுறவேபொலியும்பூங்குழலும்சேல்விழியும்படர்த்தவன்னாய். (19)

தெள்ளறிவேயொன்றுமுயர்தேவமணியேதிரண்டுசெறிந்தமாயைக்
குள்ளமருமோர்மருந்தேயோதுமறையின்பொருளேயுணர்விலார்க்குக்
கள்ளநெறியேவிதியேகற்பகவித்தேகருணைக்கடலேயாய்ந்தோர்
அள்ளியருந்தற்கினியதெள்ளமுதேசேல்விழியேயருள்செய்வாயே. (20)

தென்னமுதேயென்றனதுதிருவருளாம்புனல்முழுகிச்சிறியேன்வாடா
துன்னமெரியுக்கனலாம்புன்கவலைதுய்ந்தலியவுலகின்மீது
கன்னனெனவென்னைவமைக்கும்மிடிமைகாமமெனும்கசடுநீங்கி
ஒன்னுனதுசிற்றடியைக்கைப்பிடியாய்க்கொள்ளுவன்சேலுறைத்தகண்ணாய்.()

## IV. எழுசீர்க்கழில்நெடில்விருத்தம்.

தந்தை நீயுயர் தாயு நீபொறி
தந்த லைத்திடு விந்தைநீ
புந்தி நீமதி நாடி வேண்டு
பொருளும் பேருமு ருவுநீ
சிந்தை மீதுனை யெண்ணி டாது
திரிந்து பொய்யுடற் பேணியே
அந்த ஞயுனை யான்ம றக்கினும்
நாவுன் ஞமம ரற்றுமே.

உன்னி டாதுபு ரிந்த முன்வினை
யொன்றி யென்னைவ ருத்திடப்
பன்ன வோர்முறை யின்றி யான்படு
பாடு நீயறி யாததா
தென்ன வன்குடி மன்ன வென்றுயர்
சேயெ ழிற்கனி வாயெழும்
அன்னை யேயுனை யான்ம றக்கினு
நாவுன் ஞமம ரற்றுமே.

இன்ப மென்றும யங்கி யேபொரு
ளிச்சை யோடலை வுற்றியான்
துன்ப மேபய ஞகி நோவொடு
சோர்த லீயறி யாததா
முன்பு காஞ்சன மாலை மெய்த்தவ
மூண்டெ ழுந்திடு மாமணி
அன்பி லாதுனை யான்ம றக்கினும்
நாவுன் ஞமம ரற்றுமே.

# மீன் உரம்.

நம் நாட்டில் நாம் எத்தனையோ உரங்கள் நிலத்துக்கு உபயோகித்து வருகிறோம். சென்ற சில வருஷங்களாக மாட்டெலும்புத் தூள் அமுரிச்சாணி வேப்பம்பிண்ணாக்கு முதலிய எருக்களை அதிகமாய் உபயோகப்படுத்திக் கிருஷித்தொழிலை அபிவிருத்தி பண்ணிக் கொண்டு வருகின்றோம். கிருஷி சம்பந்தமாய் முன் நம் நாடு முதன்மையாயிருந்து வந்ததென்பது உலகமறிந்த விஷயமே. ஆனால் தற்கால நிலைமையில் நாம் அதுவிஷயமாய் அந்நியநாட்டாரிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டியவை அநேகமிருக்கின்றன. நம்காலடியில் இருக்கும் பதார்த்தங்களை நாம் நன்கு பகுத்தறிந்து உபயோகிக்க முயன்றால் எத்தனைபெருத்த லாபங்களையடையலாம். அவ்வாறு செய்யாமல் பல பண்டங்களை வீணாக்குகிறோம். நாம் வீணாக்குகிறதை அந்நியர்கள்பலவிதத்தில் பயன்படுத்துகிறார்கள். நாம் குப்பையோடு குப்பையாய்ச்சேர்க்கிற ரம்பத்தூளை எத்தனையோ விதங்களாக ஜர்மன் தேசத்தார் உபயோகிப்பதாக நம் பாதுவில் நீளநினைந்து எழுதியிருக்கின்றோம். ஆகையால் எதையும் அற்பப்பொருள் என்று கருதாமல் சாஸ்திர ஆராய்ச்சிசெய்து உபயோகித்தல் நாட்டுக்கு நன்மைதரும். மீன்களை விளைநிலங்களுக்கு உரமாக ஜப்பானியர்கள் உபயோகித்துப் பெருத்த லாபமடைகிறார்களாம். ஜப்பானியர் 'ஹெர்ரிங்கு' 'ஸார்டைன்' என்ற இரண்டுவிதமீன்களை நீராவி கொண்டு காய்ச்சி அவைகளின் கொழுப்பாகிய எண்ணெய்யை யெடுத்துக்கொண்டு பாக்கியுள்ள சக்கையை உரமாய் உபயோகிக்கின்றனர். அவ்வாறு ஜப்பானியர்கள் வருஷந்தோறும 1,10,000 டன் நிறையுள்ள மீன்உரம் சேர்க்கிறார்களாம். அது டன் ஒன்றுக்கு ரூபாய் 112 முதல் ரூபாய் 120 வரை விலையாகின்றது. அவர்கள் தங்கள் நாட்டிலுள்ள மீன் உரம் போதாதென்று அந்நியநாடாகிய மன்சூரியாவிலின்றும் அவ்வுரம் தருவித்து நிலத்தைக் கொழுமை பண்ணுகிறார்களாம். இதனால் அவர்கள் மீன்உணவைத் தள்ளிவிடவில்லை. அதற்கும் அதனை ஏராளமாக உபயோகித்துவருகின்றனர். நம் தேசத்தில் மீனுகளுக்குக் குறைவா? எங்குப்பார்த்தாலும் கடல்

வியாபித்திருக்கின்றது. அதில் கிடைக்கும் மீனுக்கோர் அளவில்லை. சிலர் நம் நாட்டுமீனைப்பிடித்து மேல்நாட்டுக்கு ஏற்றுமதிசெய்துவிடுகிறார்களென்பது வெளியாகிறது. சென்றவருஷம் அவ்வாறு ஏற்றுமதிசெய்யப்பட்ட மீன்உரத்தின் நிறை 7694 டன் என்றும் விலைமதிப்பு ரூ. 3½-லட்சமென்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. நம் செம்படவர்கள் தாம்பிடித்த மீன்களிலும் வேண்டியவற்றை வைத்துக்கொண்டு மீதத்தைக் கீழேகொட்டிவிடுகிறார்கள். அது மண்ணோடுமண்ணாய் மட்கிப்போய் உபயோகமில்லாமற் போகின்றது. இத்தொழிலில் கப்பல் வியாபாரிகள் சொற்பம் கவனம் செலுத்தித் தகுந்த ஏற்பாடுகள்செய்து அந்நிய நாடுகளுக்கு அச்சரக்குப் போகாதவண்ணம் தடுத்து நம் நாட்டுக்கே உபயோகப்படுத்த முயற்சி செய்வார்களானால் நம் நாடு செழிப்புற்று நம்மிடிமை ஒருவாறு நீங்க வழியாகும். இம்மாதிரி அற்ப சொற்பத் தொழில்களையுங்கூட அந்நியருக்கு இரையிட்டுத் தூங்குவோமானால் நம் நாடு எவ்வாறு விருத்தியடையும். பெரியகப்பலாயிருந்தாலும் சிறு துவாரமும் அதனை அமிழ்த்திவிடுமன்றோ. ஆகையால் ஒவ்வொரு விஷயத்தையும் அற்பமோ பெரிதோ கூர்ந்து கவனித்து நம் நாட்டின் க்ஷேமத்தை நாடுவோமாக. அந்நியநாட்டுச்சரக்குகளை ஒழிப்பது மட்டும் போதுமா? நம்நாட்டின் கைத்தொழில்களையும் கவனித்து விருத்திபண்ணினால் மட்டுமே தேசத்துக்கு க்ஷேமம் உண்டாகும்.

பத்திராதிபர்.

# ஆயுர்வேதத்தின் வரலாறு.

பிரபஞ்ச சிருஷ்டியில் மனிதர்கள் ஜனனம்முதல் மரணம்வரை யிலும் பெரும்பாலும் அனுபவிப்பது கஷ்டம், சுகம், துக்கம், சந்தோஷம் இவைகளைச் சகிக்கும்படியே இருக்கிறது. இவைகளை சகிப்பதும் அநுபவிப்பதும் பிராணனே. அதிருசியமாயிருக்கும் பிராணன் நிற்பதற்கு ஏற்பட்டிருக்கிற இடமே சரீரமென்னப்படும். சரீரத்தைத் தாங்கிக் கொண்டுவருவது அவயவயங்கள். இவை கிரமமாய் நடத்தல் சௌக்கியம். அக்கிரமமாக நடத்தல்தான் வியாதி. "மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர் வளிமுதலா வெண்ணிய மூன்று" என்கிறபடி இவ்வியாதியைப் போக்க அநுபவத்தினுல் கண்டுகொண்ட பதார்த்தங்களை [illegible] தெரிவிப்பது ஆயுர்வேதமென்று பெயர். நமக்குள்ள 4-வேதம், 6-சாஸ்திரம், 64-கலைக்கியானம் என்பதில், 64-கலைக்கியானத்தில் 13-வது பிரிவாக வைத்தியமும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆதிவைத்திய கிரந்தமாகிய ஆயுர்வேதத்தில் அனேக பிரிவுகள் உண்டு. ஆயுர்வேதத்தைப் பிரம்மாவானவர் தக்ஷபிரம்மாவுக்கு உபதேசித்தாரென்று சரகம், சுச்ருதம் என்னும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. அவர் அதைக்கொண்டு சிகிச்சாதர்சனம் என்னும் ஒருசிரந்தம் உண்டுபண்ணினுர். இந்தக் கிரந்தத்தைச் சூரியபுத்திரர்களாகிய அச்வினி தேவதைகள் உபதேசிக்கப்பெற்று, தேவ வைத்தியர்களானுர்கள். இவர்களின் வைத்தியப் பெருமையைக் கண்டு, தேவேந்திரனும் இவர்களிடத்தில் வைத்தியம் கற்றுக்கொண்டான். சிலகாலங்கள்சென்ற பிறகு வைத்தியருக்குள் மதங்கள் ஏற்பட, வைத்தியமும் வெவ்வேறுகப் பிரிந்தது.

பூலோகத்தில் ரிஷிகள் மனிதர்கள்படும் கஷ்டத்தைத் தெரிந்துகொண்டு, அதை நிவர்த்திக்கு மார்க்கம்தேட ஹிமோத்கிரியில் சபைகூடினுர்கள். இந்திரனுடைய சகாயம் வேண்டியிருப்பதைத் தெரிவித்து, அவர்களில் பாரத்துவாஜர் என்னும் மஹரிஷி தேவேந்திரனிடத்திற்போய் வைத்தியம் கற்றுக்கொண்டுவர அனுப்பப்பட்டு,

அவ்வாறே கற்றுணர்ந்து திரும்பவும் ரிஷிகளிடம் வந்துசேர்ந்து மற்றுள்ள இருடிகளுக்கும் மேற்படி வைத்தியம் போதித்தார். இப்படி ரிஷிகள் கற்றுக்கொண்ட வைத்தியத்தை நடத்திவரும் காலத்தில் ஆத்திரேய மகரிஷி தமது சிஷ்யர்களுக்கு வைத்தியம் கற்பித்துக்கொடுத்தார். அவர்கள் பிரபல வைத்தியர்களாகி அநேகநூல்களைச் செய்தார்கள். வேறுவிதமாய்ச் சிலகிரந்தங்களில் ஜலப்பிரளயமானபோது சகல சாஸ்திரங்களும் போக்கழிந்து போனதாகவும், பின்பு க்ஷீராப்தியைக்கடைந்தபொழுது அமிர்த கலசத்தோடு தன்வந்திரி பிறந்ததாகவும் கண்டிருக்கிறது. இவர் தேவேந்திரனிடத்தில் வைத்தியம் கற்றுக்கொண்டு, தேவலோகத்தில் மஹாவைத்தியராக இருந்தவர். மனிதர்கள் வியாதிகளாற் படும் கஷ்டத்தை நிவர்த்திக்கும்பொருட்டு பூமியில் காசிராஜாவாக அவதரித்து வைத்தியம் [illegible] கள் தங்கள் சிஷ்யர்களில் சிலரை அனுப்பி வைத்தியம் கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யவே அவர்களும் புகழ்பெற்ற வைத்தியர்களானார்கள். இது ஸ்ரீ இராமச்சந்திரர் அரசுசெலுத்திய காலத்தில் நடந்ததாகப் பெரியவர்கள் நிர்ணயிக்கிறார்கள். இந்த ரிஷிகள் காலங்களுக்குத்தக்கபடி சில சில வைத்தியக்கிரந்தங்களை உண்டாக்கினார்கள். அவைகளுக்கு சரகம், சுசுருதம் என்று பெயர். இந்த இரண்டு கிரந்தங்களை அனுசரித்துப் படாசாரியர் பாகடம் என்னும் ஒரு நூல்செய்தார். இதுவே அஷ்டாங்க இருதயம் என்று மலையாளதேசத்தில் வழங்கிவருகிறது.

சுமார் 350 வருஷங்களுக்குமுன் பேபோ பிரகாடம் என்னும் ஒரு வைத்தியநூல் இயற்றப்பட்டது. இதுதான் தற்காலத்தில் அனுகூல வைத்திய கிரந்தம்; சிந்தாமணி என்று நமது தமிழ் நாடுகளில் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விதமாய் நாம் வாசம்செய்யும் இந்தப் பரதகண்டமாகிய இவ்விந்தியாவில் பூர்வத்தில் ஆயுர்வேதம் ஒன்றுதான் உலகெங்கும் புகழ்பெற்றிருந்தது. இந்த உயர்ந்த வித்தையை அக்காலத்தில் அராபியர், யுதேயர், எகிப்தியர், ஜெனோவியர், வேனிசியர், கிரேக்கர் முதலான பரதேசிகள் கற்றுத் தெளிந்ததாக சில சாஸ்திரக்காரர்கள் செப்பினதன்றியில், சாலோமான் அரசன் முதல் ஏசுகிறிஸ்துநாதர் முதலானவர்களும் இந்து வைத்தியத்தைக்

கற்றவர்களென்றும் ஒரு அமெரிக்கசாஸ்திரி எழுதியிருக்கிறார் என்று காலம்சென்ற மிஸ்டர் மைசூர் அரண்மனை வைத்தியர் ஸ்ரீ ஜெகந்நாதநாயுடு தான் இயற்றிய பைஷஜ கல்பம் என்னும் கிரந்தத்தில் கண்டிருக்கிறார். பிறகு மகமதிய நாட்டார் ஆளுகைக்குள் நமது தேசம் சிக்கிக்கொள்ள நமது இந்துவைத்தியம் அலக்ஷியம் செய்யப்பட்டு நாளடைவில் க்ஷீணமடைந்துவிட்டது. பாடசாலைகளை ஏற்படுத்தி வைத்தியம் கற்றுக்கொடுக்கும் க்ரமமே அற்றுபபோய்விட்டது. அதன்பிறகு நமக்கு இப்போதிருக்கிற அரசாட்சியிலும் அதைத் தலை எடுக்க ஏதுவில்லாமல் ஆழ்ந்து கிடக்கிறது. நம்மை ஆள்வோரும் இந்து வைத்தியத்தின்மேல் பிரீதிவைத்தால் சில வருஷங்களுக்குள் அதற்கு ஓர் ஏற்றம் உண்டாவதற்குத் தடையில்லை. நமது முன்னோர்கள் பிணங்களை அறுத்து சகலவித பரிசோதனையும் செய்ததாகவும், தீராத கஷ்ட சாத்தியரோகங்களைத் தீர்த்ததாகவும் சாஸ்திரங்களால் தெரியவருகிறது. இப்படிச் சகலவித மனுஷராசிகளுக்கும் ஆதிகிரந்தமாகிய நமது ஆயுர்வேத சாஸ்திரத்தின் பெருமைக்குஆதாரமாக இருக்கும் மூலிகைகளையும், மற்றுமுள்ளவைகளையும உண்டாக்கி நம்மைக் காப்பாற்றி வளர்க்கும் நமது மாதாவாகிய இந்தப் பூமிதேவியை நம்மவர்கள் அனைவரும் தினம் வந்தனம் செய்வதைத் தவிர வேறொருசாதனமும் எவரும் கண்டிலர் என்பது அனைவரும் தெரிந்துகொண்ட விஷயம். இருந்தாலும் சில சமயங்களில் அதனை மறப்பது நமக்குக் குறைவன்றோ.

---

# *இராஜபக்தி.

## (எதார்த்தமும், போலியும்.)

பகுத்துள முறையினிற் பற்றுவைத் தத்தன்
ஆணையின் வரம்பை அறமதித் ததனுளே
திருப்திகொள் மனத்தனாய்ச் செங்கோல் செலுத்திடும்
அரச னிடமே அன்புபா ராட்டுவோம்.
எம்மைச் சுதந்தரம் எய்தும் படி விடுத்
திருப்பவ னுக்கே எம்மன தாரவும்
உவகை யுடனும் ஊழியம் செய்வோம்.
அவ்விதம் செய்யினும், அவன்கே வலம்நரன்
என்பதை யாங்கள் எம்மனத் திருத்தி,
அளவிற் கதிகமாய் அவனைநாம் நம்போம்.
அவன்ஓர் அரச னாயினும், அதிலும்
இங்கிலாந் துக்கே இறைவனாய் இருப்பினும்
மனவலி இல்லா மனிதனாய் இருக்கலாம்
அதிகா ரப்பிரிய னாகிய வீணனாய்
அவன்தன் ஆணையை அல்வழிச் செலுத்தலாம் ;
குடிகள் விரும்பிக் கொடுப்பதைக் காட்டிலும்
அதிகம் பெறப்பே ராசையும் கொள்ளலாம் ;
அவர்கள் அளிப்பதற் கதிகமா அடைய
ஆசைப் படுவது தேசத் துரோகமே.
ஆணை செலுத்தவும் அன்பொடு காக்கவும்
அரசாங் கத்தினை அலங்கரித் திடவுமே
எம்மவன் அவன்அலால் எம்அர சியலினை
மாற்றவும் புரட்டவும் மற்றெதும் செயவும்இவ்
பொதுநலத் திற்காப் புகழத் தகும்விதம்

---

* இது William Cowper என்ற ஆங்கிலக்கவி இயற்றிய "The Task." என்பதினின்றும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

உயிரைக் கொடுத்தும் ஊழியஞ் செய்ய
அவனுடை யவர்நாம் ஆவமே அன்றி
அடிமையாய் இருத்தற் கவனுடை யவர்அலேம்.
அரச னிடத்தே அன்புடை யோமெனப்
பெருமைபா ராட்டும் பெற்றி மாந்தீர்!
நுமதன் புக்கும் எமதன் புக்கும்
உள்ளவேற் றுமையை உற்றினே நோக்குமின்:
ஆளைநாம் விரும்புவம்; அவனுடை அற்ப
ஆடம் பரமே ஆகும்நும் விருப்பு.
பொதுஅர சாட்சியைப் புரந்திடும் அண்ணல்பால்
பற்றுநாம் கொண்டுளோம்; மற்றுநீ ரோ,அவ்
ஆட்சிக் கவலைதன் அகத்திலா அதனுடைத்
துன்பகா ரணனிடம் அன்புளோர் ஆகுவீர்.
சுவாதீ னம்பெறும் அவாவினே அரசனை
நேசிப் போம்நாம்; நீவிரோ என்னில்,
தனையும் அடிமைத் தனமும் எய்தவே
கொடியனை அரசனுங் கொண்டு நேசிப்பீர்.
எமதன் போர்வழி யெய்வது. மற்றப்
பற்றின் மூலம் பகுத்தறி வாம்.அதே
அறிவுக் கடுத்ததும் ஆண்மைக் குரியதும்
தானு உதித்திடும் தன்மைகொண் டதும்ஆம்.
ஆனால் உங்கள் அன்பெனி லோ,தனைத்
தரையினிற் றேய்க்குந் தாள்களை நக்கிக்
கொடுங்கோற் கஞ்சி ஒடுங்கிடும் விதமாக்
குருட்டபி மானப் பொருட்டுதிப் பதுவே.

## *தீநெறி.

பார்த்த மாத்திரத் தேப கைத்திடும் பான்மை கொண்ட பயங்கரக்
காத்திரத்தரூபி தீநெறி காணிர் ஆயினும் அதன்முகம்
பார்த்துப் பன்முறைப் பழகினு அதன் பால்மு தற்பரி தாபமே
பூத்துப் பின்பொறை கொள்வம் பின்அதைப் புல்லு வாம்இது திண்ணமே.

* இது "Vice is a monster &c" வின்மொழி பெயர்ப்பு.

# ரோஜா.

சித்திரை வைகா சிக்கோர் சிறப்பளித் திலங்கும் ரோஜா
எத்துணை நேர்த்தி யான திம்மலர் எழில்தான் என்ன!
இத்தகைத தெனுமு கூர்த்தத் திதழ்வளங் குறைந்துவாடி
நத்திய நிறமுங் கெட்டோர் நாட்பொழு தினிலே பொன்றும்.

ஆயினும் இப்பூ வுக்கிவ் அவனியில் உள்ள ஏனை
ஆயபன் மலர்க்கு மில்லா அருங்குணம் உண்டே தென்னில்
ஏயதன் இதழ்கள் வாடி எழில்நிற மெல்லாங் கெட்டு
மாயினும் இனிமை யான மணமது வீசா நிற்கும்.

இளமையும் மக்கள் தம்மின் எழிலும்இம் மலரைப் போன்று
வளமையும் வனப்பும் வாய்ந்தும் வரவர வாட்டங் கண்டு
தளர்வுறும். தளர்வுறாமல் தடுத்தவை ஓம்பல் வீணே [கும்,
மளமள வெனச்செல் காலன் மாத்திரைப் போதில் மாய்க்

ஆதலின் இளமை தேசென் றுயஇவ் விரண்டும் பற்றித்
தீதுறும் செருக்கே கொள்ளேல் தேய்ந்தவை வாடிச் சா
ஓதுநம் கடன்நன் றாற்றி ஓங்குநற் புகழே எய்தின் [மால்
ஈதுரோ ஜாவைப் போல இறப்பினும் மணமே வீசும்.

---

## ¶கோதிலா மனம்.

கோதிலா மனத்தின் மேலதாய் வலிமை
கொண்டமார்க் கவசம்யா துளது?
நீதியாற் சண்டை புரிபவன் எவனும்
நிறுவுமுக் கவச மொய்ம்பினனே
தீதுலாம் அநீத நெறியனாயும் களங்கம்
தீண்டிய மனக்கரி உளான்தன்
மீதிலே உருக்குக் கவசமே போர்த்தும்
வெற்றுடம் புடையனா குவனே.

---

*"Dr. Watts" என்ற ஆங்கிலகவி இயற்றிய "Rose" என்பதன் தமிழ் மொழிபெயர்ப்பு.

¶இது "What Stronger breast-plate &c" யின் மொழிபெயர்ப்பு.

# இரக்கம்.

பிறர்வற் புறுத்தப் பிறந்திடல் என்றல்
இரக்கம் என்பதன் இயல்பா காது.
விண்ணி னின்றும் மண்மீ திழியும
இனிய மழையென இழிவதிவ் இரக்கம்
இரண்டு விதத்திலும் ஈயும் இதுநலம்.
இரங்கப் படுவோன் இரங்குவோன் என்னும்
இருதிறத் தார்க்கும் ஈதருள் புரிந்திடும்.
வலி மிக் காரிடம் வலிமைமிக் குள்ளதாம்.
அரியணை மீதமர் அரசனுக் கன்னவன்
புனைமுடி யினும்மிகப் பொருத்தமுடையதே.
அரசன் செங்கோல் அவனியில் அவனுடை
ஆணையின் ஆற்றலுக் கறிகுறி யாகும்.
பயமும் மாட்சியும் பயப்பதன் பண்பாம்.
அரசர்பாற் றிகிலும் அச்சமும் அதில்உறும்.
இரக்கம் இக்கோலினும் ஏற்றம் மிக்குடையதம்
தரசர் மனச்சிங் காதனத் தமர்வதாம்.
ஈசர்க் கேஅது இயைந்த ஓர்குணம்.
நீதியோ டிரக்கமும் நிகழ்வுறுங் காலையில்
மண்இறை ஆணையும் விண்இறை ஆணைஆம்.
ஆதலின், யூத! நீதியைப் பெறுவதே
நின்வழக் காயினும் நீ நினை இதனை :
கேவலம் நியாயமே தேவன் கைக்கொளின்
நம்மவர் எவருமே நற்கதி காண்கிலம்,
இரங்குமன் னிக்கநாம் ஈசனை வேண்டுவோம்.
அதேவேண் டுகோள்நாம் அனைவரும் மற்றவர்க்
கிரக்கச் செயல்செய இனிதுகற் பிக்குமே.

---

ம. கோபாலகிருஷ்ணையர்,
மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்து அக்கிராசனாதிபதி.

*இது "ஷேக்ஸ்பியர்" கவி இயற்றிய "Merchant of Venice" என்பதினின்றும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.)

# •காதம்பரி•

—:o:—

[மகா சுவேதை தன்வரலாறு கூறியது.]

*சீருடைகின் றிருவவதா ரத்தினாற் றெய்வகணத்*
*தியாருடைய திருமரபோ வீடேற விட்டதுதான்*
*பேரழகு தருமிந்தப் பிராயத்தே மனமொடுங்கிச்*
*சாரல்வனத் தனித்தனியே தவஞ்செய்யக் காரியமேன்.*

*என்றனவி லவடானு மிருந்தொன்றை நினைந்துளமேற்*
*சென்றதுயர் மீதூரச் செயலழிந்தொன் றுரன்றுருக*
*நின்றவிழுந் தரளமென நீணெடுங்கண் ணீர்சோர*
*வன்றணிகூர்ந் தறவிம்மி வாய்விடா திருந்தழுதாள்.*

*அப்படியே யழுமளவி லண்ணலும்பார்த் தருந்துயர்தா*
*னிப்படியே தெளிந்தோர்க்கு மெய்துமா றிருந்ததெனப்*
*பொய்ப்படியே னெறோளாய்ப் போனவந்தா ளினைப்பித்தேன்*
*றப்பிதுவே போதுமெனத் தன்னையே தானொந்து.*

---

*இது, ஒரு வடநூல் ; பாணன் என்னும் மகாகவியால் இயற்றப்பட்டது; சிறந்த வசன காவ்யம். "காதம்பரீ ரஸஜ்ஞாநாம் ஆஹாரோபி நரோசதே" என்று பண்டையோர் இதனைப்பெரிதுஞ் சிறப்பித்துப் பாராட்டிக் கூறியிருத்தல் காண்க: காதம்பரியின் சுவையை யறிந்தவர்களுக்கு ஆகாரங்கூட இனியாது என்பது இதன் பொருள். கல்வியிற்பெரியராகிய கம்பரதுபாடல்களில் இக்காதம்பரியின் கருத்துக்களும் அழகான கற்பனைகளும் ஆங்காங்குக் காணப்படுதலாலும் இந்நூற்சிறப்பு விளங்கும். இவ்வரியபெரிய நூலைத் தமிழுலகமுங் கற்றுக் களிக்கவேண்டுமென்னுங் கருணையினால் கதைத்தொடர் இனிது விளங்குமாறு அவசியமான விஷயங்களையும் கற்பனைகளையும் தழுவிச் சுருக்கமாக 1814-தமிழ்ப்பாவினங்களால் மொழிபெயர்த் துதவிய மகோபகாரி ஆதிவீராககவி என்னப்படுவோர். இவர் சோழநாட்டிலே அந்தணர் மரபிலே பாரத்துவாசகோத்திரத்திலே அருளாளர் என்பவருக்குத் திருமகனாராக உதித்தவரென்றும்,விஷ்ணுபத்தியிற் சிறந்தவரென்றும் பாண்டிநாட்டிலே சுந்தராபுரியிலே வாழ்ந்துவந்த தேவர் நாயகன் என்னும் ஒரு வைசியகுல பிரபு சிகாமணியால் சன்மானிக்கப்பெற்று அவனது வேண்டுகோளால் இந்நூலை இற்றைக்கு 490-வருஷங்கட்கு முன்னர் இயற்றியுபகரித்தாரென்றும் இந்நூற் பாயிரத்தால் இனிது விளங்குகின்றது.

போயருவி நீர்கொணர்ந்து போற்றிமனந் தேற்றியபின்
ஆயிழையு முகங்கழுவி யணிந்தமர வுரிக்கலையாற்
சேயகய னந்துடைத்துத் தீயெழவே நெடிதுயிர்த்துத்
தூயவளை முகநோக்கிச சொல்லுவன்கே ளெனவுரைப்பாள்.

அறப்பாவி யாயருளொன் றற்றவளாய் முற்றியவென்
பிறப்பாலென் பயனேது பெருந்தவத்தாற் பயனேது
குறித்தாலுங் கூறரிது கூறினுங்கேட் கரிதுமனம்
பொறுத்தாலும் பொறுக்கரிது பொறுக்கரிதா யினுங்கேண்மின்.

## வேறு.

அண்ட ருலகி லரம்பையரென் றவனி புகழுஞ் சிலமாத
ருண்டு தலைகா ளவர்குலந்தா னுயர்வே தத்து மயனுளத்தும்
பண்டு கடைந்த வமுதத்தும் படிநீ ரெரிகா லெனுமிவற்றுஞ்
சண்ட கிரண மிமகிரணத் தனிலு மதவே டன்னிடத்தும்.

தரும னிடத்து மினனிடத்துந் தக்கன் மகளிர் தங்களிலே
யிருவர் முனிவர் வருட்டையுமென் றிவர்க ளிடத்து மெனவித்த
வரிய பதினா லிடத்துதித்த ததனோ டந்த வரிவையர்பால்
மருவி யிரண்டு காந்தருவ மரபு முதித்த வவைதம்மில்.

சிறந்த முனிபா லுயர்சித்ர சேனன் முதலா மீரெண்மர்
பிறந்து வளர்ந்தா ரவர்க்கெல்லாம் பின்னா யறிவான் முன்னாகி
நிறைந்த சித்ர ரதனென்போ னீதி நெறியால் மிகவிளங்கி
யிறைஞ்சு மகவான் றோழனுமா யிந்த மரபிற் கிறையானான்.

இவன்ற னிப்பா ரதவருடத் தெல்லை முடிந்த வத்திசையி
லுவந்தா னில்லாக் கிம்புருட வருட மதனுக் கணிவரையா
நவஞ்சே ரேம கூடத்தை நகரி யாக்கி யதிலிருந்தான்
றவஞ்சேர் குணத்தோ யந்தவரை தானு மியனோ சற்றிடமே.

இவன்செய் ததுவே சயித்ரரத மென்னு மிந்த மலர்க்காவு
மிவன்செய் ததுவே யச்சோத மென்னு மிந்தப் பூந்தடமு
மிவன்செய் ததுவே யிக்கோயி ருனு மிருந்தோன் வலியாலே
யிவன்செய் ததுவே செயவிலங்க ளெழிற்காத் தருவப் புவிக்கெல்லாம்.

இனிமற் றந்த வருட்டைதரு மெழுவோ ரிற்றம் புருமுதலா
முனிவற் றுயர்ந்தோ ரறுவர்க்கு மூத்தோ னன்னப் பெயரோனை
வினைபொற் கழலான் சித்ரசதன் மகுடஞ் சூட்டி வைத்தாசு
மனுசத் திறமும் பகுந்தளித்தா னவன்வாழ பதியு மப்பதியே.

அந்த வமுத மதிக்கதிரி லமைந்த மாபி லவ்வமுதாற்
றந்த தெனவே யதிதவளத் தருபே ரழகு தன்னுடனே
வந்து பிறந்தாள் கௌரியெனு மடந்தை யொருத்தி யவடன்னைச்
சிந்தை களிகூர்ந் தஞ்சன்முதற் றேவி யாகச சேகரித்தான்.

அஞ்சன் றானுங் கௌரியே யெனும்பூந் திருவு மெப்போது
மிஞ்சுங் காதன் மீதூர விற்போர் வேளு மிரதியும்போ
னெஞ்சந் தானு முயிருமொரு நீர்மை யாகி நெடுங்காலம்
வஞ்சந் தானென் றறியாமல் வாழ்ந்தார் வாழு மந்நாளில்.

அவ்வா றமைந்த பெரியோருக் கரிய மகவா யவதரித்தே
யிவ்வா றமையாத் துயர்க்கெல்லா மிலக்காம் பாவி யொருத்தியையே
மெய்வா சகனு மென்றந்தை மிகவே களிகூர்ந் தென்னுடைய
தூய்வா ளொளியா லெனக்குமகச சுவேதை யெனவே பேரிட்டான்.

ஆண்பெற் றவர்போ லென்னையவ னறவே மகிழ்ந்து பாராட்டப்
பாண்பெற் றினிய யாழ்போலப் பயில்காந் தருவர் மடிகளிலுந்
தூண்பெற் றனைய தோள்களிலுந் தொடைமார் பிலுமே விளையாடி
காண்பெற் றறியா யிருபேதை நன்னுள் கடந்தேன் பின்னுகை.

வேறு.

தளிரிடையே மலர்தோன்றி மலரிடையே தேன்றோன்றித் தயங்கு தேனி
லளிதருகா ரளிதோன்றி யதனிடையே மதந்தோன்றி யதிலே யெல்லாம்
வெளியிமோர மதன்றோன்றி யிப்படியே மெல்லவந்த வசந்த காலங் [கோலம்.
தெளிவதுபோ லென்னிடையே திகழ்ந்ததுவந் தெழிலிளமைச் செவ்விக்

மயிலாடக் குயில்கூவ வண்டினங்க ளிசைபாட மதன பூசை
செயுமாதர் துழனிமிகப் பெருகியெழப் பரிமளமென் றென்றல் வீசப்
பயில்வகச மலர்த்துளி பரக்குமணற் குவைகாட்டப் பதுமக் காடே
வெயில்காலும் படிமலர விருள்காலும் படிமலர விளையார் நீலம்.

வரிவளைவா யமுதான மகிழ்புளகஞ் செய்ததுபோன் மலர்ந்து வாழ
வரிபொருந்து புரவொலியா லடிமலரா லசோகமெலா மசோக மாகக்
குரவமெலா முகிழ்முலையாற் குழைந்திளக மற்றுமெலாங் குளிர வார்க்குங்
கரைதெரியா வானந்த காரணமாய் வரும்வசந்த காலத் தோர்நாள்.

இந்தமலர் வாவியினீ ராடுவதற் கென்னைவா யானுங் கூட
வந்துகரை யருகொளிரும் பாறைகளின் மலைமகடன் வளைக்கை யாலே
சுந்தரமாம் வகையெழுதித் தொழுதவரன் றிருவடியைத் தொழுது நின்றுஞ்
சந்தனமென் சோலைகளுந் தழைத்தகொடி மண்டபங்க டானும் பார்த்தும்.

ஆர்த்துவருந் தெய்வதைகள் விளையாடுங் கொடிபூச லணியும் பாரைப்
போர்த்தமலர்த் துளியிலே தாளமூர்த்தி யோதிமங்கள் போக மாட்டா
வாய்த்ததருச குழல்களு மற்றுமுள்ள புதுமைகளு மகிழ்ந்து பார்த்துஞ்
சேர்த்தவுயிர்ப் பாங்கியரு மொருவேனும் விளையாடிச செல்லும் போதில்.

அற்புதமாய் மனோகரமாய்த் திவ்வியமா புலகோர்கண் டறியா வொன்றா
யெற்பயில்கா ரளிமுழுது மொன்றினையொன் றறமூர்த்தி யெதிர்கொண் டோட
பற்பலவா மவ்வனப்பூம் பரிமளங்கள் யாவையுங்கீழ்ப் படுத்தி மேலாய் [டப்
வெற்பரசா மிவ்வாவிற் காலுடன்வந் தொருவாசம் வீசிற் றன்றே.

அந்தநறும் பரிமளத்தான் முகுளிதமாம் விழியுடனீ தறிவே மென்னுச்
சிந்தைமகிழ்ந் ததனை திரே சிறிதிடஞ்சென் றளவிலான் றிருக்கண் ணலே
வெந்தமத வேளைவில் சோகத்தான் மெய்த்தவத்லை பிசமேற் கொண்டு
வந்தவசந் தனைப்போன்று மீசனருள் பெறத்தவஞ்செய் மாரன் பேர்ன்றும்.

தன்னொளியா லெங்கிலமுந் தனிக்கனக மயமாக்கித் தழைந்து வீழ்ந்த
செஞ்சிறவே ணியுமகன்ற திருநுதலும் புண்டரமுஞ் சிலையே யன்ன
மைஞ்சிறவார் புருவமுநீண் டகன்றனவெண் டாமரைபோன் மலர்ந்த கண்ணு
முன்னிதமாய் நீண்டுவளர்ந் தொளிர்மூக்குஞ் செவ்வாயு மோங்கு தோளும்.

இருதோளில் வீழ்ந்தலைந்த குழையுமறை யுசசரிப்பா விலங்கித் தோன்றுந்
தரமேவு வெண்ணகையு மழகுபொழி திருமுகமுந் தரித்த மானி
னுரிமேவு மணிமார்பும் புரிநூலு மொருகையிற் பலாசத் தண்டும்
வரமேவு பவித்திரமும் படிகமணி கமண்டலமு மற்றும் யாவும்.

சட்டினமுஞ் சிபுமுடுத்த வற்கலையு ஞானத்தாற் கரிய யோக
மெட்டினையு முண்ணிலா தேகுவபோ லெழுரோம ராசி தானும்

வெட்டினவே புச்சரித்த வேதமுமாய்த் தருமத்தின் வேடம் போன்றுந்
தட்டனுகா துயர்பிரம சாரியத்தி னலங்காரத் தன்னைப் போன்றும்.

தன்பருவ மனையாளோர் முனிகுமான் றிருப்பள்ளித் தாம மேந்திப்
பின்வரவு முன்பாகி நீராடல் காரணமாய்ப் பிறங்கு வாவிக்
கன்புடனே வருமவனோர் முனிகுமா ரனைக்கண்டே னளிகள் கோடி
பின்புறவே மூரலுவதோர் பூங்கொத்து மலன்செவிமீ திலங்கக் கண்டேன்.

கண்டனவே யிந்தமலர்ப் பரிமளமே யந்தாறுங் கந்த மென்று
கொண்டிவனோர் மதனையயல் கோலமுன் வடிவாகிக் குறும்பு செய்து
மண்டர்களு முனிவர்களுஞ் சங்கியா் வகைவிடுத்தா னுக வேண்டு
மண்டலமா மதிபடைத்தா னிவன்வதனம் படைப்பதுகை வரவென்றுகும்.

எழின்மதியி னமுதகலை யிரவிகவர் கின்றனனென் பதுதான் பொய்யே
முழுதுமவை யிம்முனியே கவர்கின்று னல்லாது முளிவெங் கானிற்
றழுவியற வுலர்ந்துலர்ந்து தவஞ்செய்வார்க் கிவ்வழகு தானுண் டாமோ
பழுதுபடா வழகிதற்குக் காரணம்வே றில்லையெனப் பார்த்தே னுக.

அடைவுமடை வல்லாது வினையாம லழகினையே யடைவாக் கொள்ளுங்
கொடியமதன் புதிதான குருமலர்த்தே னினையதொரு கோல வண்டுப்
பெடையவச மழிப்பதுபோ லெனையழித்தா னப்போது பேதை யேனும்
வடிவதுகண் குலமகவிர்க் கெனவறிந்து மனமடக்க வலிபொ ருமல்.

ஒருசிறிது மிமையாதே சிறிதுகுவிந் தொருபுறத்தே சாய்ந்து வாய்ந்த
வரிப்பரவப் புடைபெயர்ந்த கண்ணாலே யவனமுகா மமுதை வாரிப்
பருகுவது போன்றுமெனைப் பரிகரித்துக் கொள்ளென்னும் பரிசே போன்று
மருளினியென் னெஞ்சனக்கே யளித்தனனென் பதுபோன்று மவனை
[நோக்கி.

நோக் கெனைமறந்து மூச்சடங்கி யோவியம்போ னெடிது நேரம்
போரசம லசையாம னின்றேனைப் பொழுதுமதன் பின்னே நின்று
சோடி யெனைத்தள்ளிக் கொண்டுசென்று விடுத்தனனோ சிந்தை யாசை
யாராம லிழுத்துக்கொண் டெய்தியதோ வறியேனு னருகே யானேன்.

நெஞ்சிலே யவன்வாழ விடங்கொடுக்கு மதுபோல நெடிது மூச்ச [லாம்
விஞ்சியே மென்மேலே தொடர்ந்தெழுந்த திதயத்தின் விருப்பமெல்
வஞ்சியா துரைப்பதுபோல் விம்மியுளசந் தனதொய்யை வழியும் வேர்வா
லெஞ்சியே கழுவுண்டு போனதுபோ லேபோன தெஞ்சா காணம்.

அனங்கசரம் படியினியென் றஞ்சினாற் போன்டுங்கிற் ருக மோக
மனக்குமர னெழில்காணப் புறப்பட்டாற் போற்புளகம் வந்த தெங்கு
நினைந்தெழுவோர் வினிவிழிந்த விருந்தாளிற் செம்பஞ்சி கலஞ்சேர் சோதி.
புனைந்ததுபோ லோகையிருக் ததுயனம் வினையேனப் போதுநாடி.

எம்போது மொய்யவரே பாராட்டத் தக்கதிந்த வின்ப மிந்தச்
சம்போக முனிவரைநா னெஞ்சினு ணினைத்திடவுந் தக்க தன்று
வம்போதான் மதனனமை யிம்முனிபாற் றன்னுகின்றான் வறிதே யையோ
சம்போத மில்லாஷம் யென்னுகு மினியென்று நாணி மீண்டும்.

என்னேயீ தொன்றிருந்த படியெனமற் றிப்படியே யறிந்திருந்து
முன்னேயின் றிங்கிதஞ்செ யைம்புலனை யடக்குதற்கு முடியா தென்ற
னன்னேய மின்னறியி னம்மைநகைத் திகழுவனே காமென் செய்வே
மின்னேயா மறியாமுன் னேகுவதே காரியமற் றேகே மாகில்.

கங்காதல் கண்டுமுனி சபித்திடினுந் தெரியாது நாம்போம் போது
பங்கான தவத்தோரைக் கண்டிறைஞ்சா தேகுவதும் பாவ முண்டா•
மிங்கான தாகவிவர் கழலிறைஞ்சி யேகுவே மெனவே யெண்ணிச்
சிங்கார முனிகுமரன் றனைநோக்கி விடகின்று செய்கை கூப்பி.

ஒருகாதின் மாணிக்கக் குண்டலமுஞ் செவித்தாரு மொருதோள் வீழ்ந்த
முருகாருஞ் சுரிகுழலுஞ் சிறிதசைய வவனுடைய முகத்தின் மீது
தருகாத லுடனடர்ந்த விழியிணையை வாங்காமற் றலம்பா ரமற்
பருகுவபோ லாதரத்தி னுடன்பணிந்தேன் .............பணிந்த போது.

மதனுமென் றனையெவர்க்குங் கடக்கரிதா கையினுலும் வசந்த கால
முதனாலு மிடமதுவா கையினுலும் யௌவனத்தி னீதி யாலு
மிதுகாலந் தீவினையே னித்துயரம் படவேண்டி யிருக்கை யாலுந்
திதமாமென் மெய்ப்பாடு கண்டவனே யவன்வலியுஞ் சிதைந்த தன்றே.

புதிதாக வருமதனை யெதிர்கொள்வ போலெழுந்த புளக மொன்றை
மதியாதென் பால்வருதன் னெஞ்சினுக்கு வழிகாட்டு மாபோன் முன்னே
விதமான பெருமூச்சு நடந்ததுகைச் செபவடந்தான் விரத மெல்லாஞ்
சிதையநது போகாதென் றஞ்சினபோ னடுங்கியது சிதைந்த துள்ளம்.

வேறுமொரு பூங்கொத்தின் செவித்தார்போற் கபோலமிசை வெயர்வு தோ
ஏற்றியதன் னுதாரத்தா லெனைப்பார்க்கப் பார்த்தெழுந்த விருகட் சோதியின்றிற்

மாறரிய வச்சோத வாவியினிற் கமலமெலாம் வானி லேறப்
பாறிமறு கிற்பறந்து திரிவனபோ லெம்மருங்கும் பரந்த தன்றே.

இவ்வகையே யறவெளியாய்த் தோன்றுமிவன் விகாரத்தா லிரட்டித் தேறி
மெய்வகையே வளர்மதன விகாரத்தி லகப்பட்டு வினையேன் பட்ட
வவ்வகையா கியவவத்தை வளவுரைக்க முடியாதப் போது நானு
முய்வகைசேர் தவமுனிவன் விகாரமெலா மடைவடைவே யுற்று நோக்கி.

இன்பதா மிதன்முன்பு புகிதுண்டு மறியாத விருடி தன்கண்
துன்பமுடன் மிகவிளைத்துச் சோம்பினாற் போன்றுநெடுந் துயிலி னாலே
வன்புடைய விழிப்புண்டா னதுபோன்று மனத்தாசை வகையை யெல்லா
மன்பிலுலைப் பதுபோன்று மிராகின்ற தறமுதிர்ந்த தனங்க ராகம்.

என்றுதுணிந் திவ்வளவோ ரிடங்கண்ட பின்பணுகி யிவன்பின் போந்த
தூன்றுதவ முனிபாதந் தொழுதெழுந்தெம் பெருமானே தோழ னாகிச்
சென்றமுனி குமரனவ னார்புதல்வன் பேரென்ன செவித்தா ராகி
யொன்றியபூங் கொத்தேதிப் பரிமளங்கண் டாதரித்தே னுரையா யென்ன

அன்னவனு மென்முகம்பார்த் தாயிழையா யிவைகேட்கு மதனா லிப்போ
தென்னபய னுரையாயிங் கெனச்சிறிதே நகையாடி யிவைதான் கேட்க
மன்னியவா தரமுண்டேற் கேண்மினென வருத்துரைப்பான் வைய மேழும்
துன்னுபெரும் புகழுடையான் சுராசுரர் முதலானோர் தொழுபொற் றாளான்.

வரமுடைசு மொழிபுநள கூபரனு மொவ்வாத வடிவி னாலே
யரமாத ரனைவருக்கு மானந்த காரியமா யகல்வா னாட்டுச்
சுரர்வாழ வுடன்வாழுந் தொல்லைமறை நெறிமுனிவன் சுவேதகேது
தரமான வாகாய கங்கையிலே திருப்பள்ளித் தாமங் கொய்வான்.

தானொருநாட் சென்றளவி லவ்விடத்தா மரைவனத்தோர் தவள மான
தேனவிழ்தா மரைமலரி லெப்பொழுதும் புலப்படவாழ் திருத்தான் கண்டங்
கானபர வசையாகி யனுராகத் தொடுபோர்க்க வன்றப் போதின்
மேனயன மாம்புணர்ச்சி முடிவான பேரின்பம் விளைந்த தன்றே.

அப்போதே யப்போதி லவதரித்தா னிவனிவனை யப்பூ மாது
கைப்போதி லேந்திமுனி முகநோக்கி யெம்பெருமான் காட்சி யாலே
யிப்போது பிறந்தனனின் புதல்வனிவன் கைக்கொணீ யிவனை யென்னத்
தப்போதா முனியிவனைக் கொண்டுபோய் வேண்டுவன சதர்கள் செய்து.

புண்டரிகத் துதித்தலைமையாற் புண்டரிக னெனப்பெயரும் புனைந்துளவென்
கொண்டகலை யனைத்தினையு மீந்தருளிக் குலப்பிரம சரிய மாதும்
அண்டர்தொழும் விரதமுந்தான் கற்பித்தா னாகையினா லவன்சே யிந்த
வெண்டிசையும் புகழ்குமர னினிச்செவித்தார் வருவாயு மியம்பக் கேண்மின்.

வேறு

இன்று கடையிருத்தை யாகையினா லீசன்றாள்
சென்றுதொழு வான்கயிலை சேர வெவொளி
னின்று மிறங்கி நெடுநெடுந் தனவனத்தி
லொன்றுமிரு வேழ முடன்வந்தே மப்போது.

மன்னு மணிமாலை மணிமேக லையணிந்து
துன்னுசெவித் தாரரதச் சூதாங் குரமணிந்து
பன்னுமல ராற்செய் பலபணியும் பூண்டுமல
ரின்னறவு மாந்தி யிதயங் களிகூர்ந்து.

சேர்த்து வசந்தத் திருமடந்தை கைகொடுப்ப
வார்த்துவினை யாடிவரு மந்தவன தேவதைதான்
பார்த்திவனைக் கண்டு பணிந்து பலகாலு
மேத்திநறும் பூங்கொத் திதுவுங் கரத்தேந்தி.

இந்த வழகுக் கிசைந்ததே யீதிதனைத்
தந்த குலப்பாரி சாதமுனா னும்பிறந்து
வந்ததனா லுன்ன பயன்பெறநீ வன்னலே
சிந்தை மகிழ்ந்து செவித்தாராக் கொண்டருளாய்.

என்றிரந்து கொண்டிவடா னேகாது பின்றொடர
நன்றிகொண்ட தன்றகைமை போற்றுகையா னணியில
னொன்றியம்பா தேபோக வுற்றிவனை நானோக்கி
நின்றுநண்பா வித்தா னெறிகேடு தானேது.

வத்திவரு கின்ற விவனா தரந்தீரச்
சாத்தியருள் கென்றவள்கை தன்னின்று நான்வாங்கி
வாய்த்தசெவித் தாராக வைத்தேனி தாகையினாற்
சேர்த்த விரைப்பாரி சாதப்பூங் கொத்தென்றான்.

என்னு மளவி லெனைநோக்கிப் புண்டரிகன்
புன்முறுவல் செய்து புனையிழா யீதெல்லாம்

# கல்கத்தா கைத்தொழிலாளர் கூட்டத்தில்

## சுதேசியப் பிரசங்கம்.

கல்கத்தாவில் சுதேசியக் கிளர்ச்சி ஆரம்பித்த பிறகு இப்பொழுதுதான் முதல் தடவையாகப் பற்பலத் தொழிலாளரும் வங்காள ஜனத்தலைவர்களை வரவழைத்துச சுதேசியத்தைப்பற்றித் தங்களுக்குப் பிரசங்கிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். சுமார் 4000 ஜனங்கள் அநாத பாபு பஜாரில் கூடினார்கள். பட்டணத்தின் பல பாகங்களிலிருந்தும் அநேக ஊர்கோல கோஷ்டிகள் வந்து சேர்ந்தார்கள். போலீசாரும் லத்தி(தடி)களோடு வந்திருந்தனர்.

முதலில் சில தேசபக்திக் கீர்த்தனங்கள் பாடப்பட்டபிறகு, சபாநாயகராகிய ஸ்ரீ சுரேந்தரநாத் பானர்ஜி சுதேசியத்தையும் பஹிஷ்காரத்தையும் பற்றிச் சுருக்கமாய்ப் பேசினார். இவ்விரண்டையுங் கண்டு கவர்ன்மெண்டார் பீதியடைந்து, அவற்றைப் பலாத்காரமாய் அடக்கிவிட முயன்றுவருகிறார்களென்றார். தாம் முன்னொருதரம் ஜெயிலுக்குப் போயிருப்பதால் இப்பொழுது ஜெயிலுக்குப் பயப்படவில்லையென்றும், அப்படி மீண்டும் ஒருகால் அனுப்பப்பட்டாலும் தம்முடைய பழைய பரிச்சயத்தைப்புதுக்கிக் கொள்ளும்படியாயிருக்குமேயன்றி வேறில்லையென்றும் வேடிக்கையாய்ச சொன்னார். பிறகு அவர் சுதேசியப் பிரதிக்ஞையை எல்லோருக்கும் சொல்லிவைக்க, சபையோரெல்லாம் அதை உற்சாகத்துடன் நின்றுகொண்டு உச்சரித்தார்கள். அவர் பிறகு கடைக்காரர்களை நோக்கி, உங்களிடத்தில் இப்பொழுதிருக்கும் சரக்குகள் செலவாய்ப் போனபிறகு மறுபடியும் சீமைச் சரக்குகளை வரவழைப்பீர்களோ என்று வினவினார். அவர்களுட் சிலர் அப்படி நாங்கள் வரவழைக்க மாட்டோமென்று வாக்களித்தார்கள். பிறகு அங்கே கூடியிருந்த புரோகிதர்களைப் பார்த்து, நீங்கள் இந்தப் பிரதிக்ஞையை நிறைவேற்றுவீர்களா வென்றார். அவர்கள் எழுந்து நின்று சீமைச சரக்குகளை உபயோகப் படுத்தும் கிருகஸ்தர்கள் வீட்டில் நாங்கள் இனிப் பூஜை முதலியவை செய்கிறதில்லையென்று மறுப்போமென்றார்கள். சபாநாயகர் அதைக்கேட்டுச சந்தோஷித்து, அப்படியானால் அந்தவிதமாக ஒரு வியவஸ்தா பத்திரிகை எழுதிக்கொடுக்கவென்று கேட்க, 2, 3, தினத்தில் அப்படியே யெழுதிக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார்கள்.

பிறகு பாரிஸ்டர் ஸ்ரீ ஜெ. சௌதுரி எழுந்து தான் பேருக்கு மாத்திரமே பாரிஸ்டரென்றும், நம் தேசத்தார் வக்கீல் வேலையை விட்டுத்தொலை

ந்து வர்த்தக வியாபாரங்கள் ஆரம்பிக்கவேண்டுமென்றும், இல்லாவிடில் தேசத்துக் குற்றிருக்கும் ஆபத்து ஒழிந்து போகாதென்றும் சொன்னார். அவர் சுதேசியத்தின் பிரயோஜனங்களைப்பற்றிப்பேசிவிட்டுப்பிறகுராஜாங்க நிர்வாகத்திற் புதிதாய் ஏற்படப் போவதாய்ப் பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கும் கவுன்சில் ஆவ் நோட்டேபில்ஸ் என்னும் உயர்ந்தோர் ஆலோசனை சங்கத்தைக்கண்டித்துப் பேசினார். கடைசியாக எல்லோரும் அந்நியவஸ்து பஹிஷ்காரத்தை உறுதியாய்க் கடைப்பிடிக்குமாறு புத்தி கூறி முடித்தார்.

பிறகு 'சஞ்சீவினி' பத்திராதிபராகிய கிருஷ்ண குமார மித்ரர் எழுந்து சென்ற 2-வருஷங்களுக்குட் சுதேசியத்தாற் சாதிக்கப்பட்ட வெற்றியைப் பற்றிச் சுருக்கமாய்க் கூறினார். இந்தியர்கள் பஹிஷ்கார முறையைவிடாமற் கைப்பற்றும் பட்சத்தில் இன்னும் ஐந்துவருஷங்களுக்குட் சீமைச்சரக்குகள் ஒரு அசாவது இங்கே தங்காதென்று சொன்னார். இப்பொழுது நம் நாட்டைவிட்டு வெளியேறும் பணம் இனி நமது கைத்தொழிலாளிகளின் பெட்டியில் விழும்; பஞ்சமும் பறந்தோடிப்போம் என்றார்.

பிறகு அப்துல் ஹுசேன் சாயப் எழுந்து சீமைச் சரக்குகளைஉபயோகிப்பது ஹிந்துக்களுக்கும் முசல்மான்களுக்கும் 'ஹாராம்' அல்லது நிஷித்தம் என்று சொல்லி அதற்காதாரமாகப் பிரமாணவசனங்களை உதகரித்தார். இந்தியர்கள் இந்தவிதத்திற் பாவம் செய்தபடியால் அவர்களது செல்வக்கடவுளாகிய ஸ்ரீமகாலக்ஷ்மி அவர்களைவிட்டுவிலகிப் போய்விட்டாளென்றும், ஆனால் அவர்கள் அதற்காகப் பச்சாதாபப்படுவதைக்கண்டு மனமிரங்கி இப்பொழுது ஜப்பான் தேசத்தில் எழுந்தருளியிருக்கும் அந்தமகாதேவி தனது பழைய பிறந்தஅகத்துக்குத்திரும்பிவர சன்னத்தமாயிருக்கிறளென்றும், அந்தத்திருமகள் அவ்வாறு வரும்பொழுது பாரதவர்ஷ செல்வம் புஷ்கலமாயிருக்குமென்றும் அப்பொழுது தான் சத்திய யுகம் அதாவது கிருதயுகம் உதயமாகுமென்றும் பேசினார்.

அதன்பிறகு பாபு லலிதமோஹன கோஷ் பேசத்தொடங்கி இந்தியர்கள் சுதேசியத்தையும், பஹிஷ்காரத்தையும் உறுதியாய்க் கைப்பற்றி நடக்கும்பக்ஷத்தில் இந்தியாவில் யாதொரு கலகமும் நடவாதென்றும், அதற்குப் பதிலாக இங்கிலாந்திலேயே லங்காஷயர் முதலான இடங்களிற்றான் கலகம் நடக்குமென்றும், அதனாற்றான் இப்படிப்பட்ட முயற்சிகளை அடக்கிவிட முயற்சிகள் செய்யப்படுகின்றனவென்றும் சொன்னார்.

பிறகு டாக்டர் சபூர் பஹிஷ்காரத்தின் ஆவசியகத்தைப் பற்றிப்பேசினார். பின்பு அசிடுவோரின் ஐக்கிய சங்கத்தின் காரியதரிசியாகிய பாபு பி. டி. போஸ் எழுந்து ஆக்ரஹமுள்ள ஒரு பிரசங்கம் செய்தார். அதிலே

அவர் விசுவகர்ம பூஜையைப்பற்றிப் பிரஸ்தாபித்து, அதை ஹிந்துக்களில் சில ஜாதியர் மாத்திரமன்றி எல்லா ஹிந்துக்களும் அநுஷ்டிக்கவேண்டு மென்று சொன்னார். அங்கு கூடியிருந்தவர்களை யெல்லாம் தேசபுலம் சம்பாதித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். இதனால் தான் போலீசாருடன் சண்டை போடும்படி அவர்களுக்குச் சொல்லவில்லை யென்று விளக்கினார். ஈக்களைக்கொல்ல பீரங்கிகள் பிரயோகிக்கப் படுகின்றனவென்றும் ஆகவே இந்த ஈக்களுக்குக்கூட ஒரு கௌரவம் உண்டாயிருக்கிறதென்றும் சொன்னார். அதாவது விளக்கிச் சொல்லுமிடத்து, பீதியடைந்துபோன வர்கள் ஆங்கிலேயரேயன்றி இந்தியர்களல்லவென்றார். கடைசியில் அங்கு சேர்ந்திருந்தவர்களை யெல்லாம் என்ன ஆபத்து வந்தாலும் பஹிஷ்காரத்தைக் கைவிடாமற் பற்றி நடக்கும்படி வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார்.

பிறகு ஸ்ரீபதி பண்டிதர் பேசத்தொடங்கி இந்தியர்கள் ராஜவிசுவாச மற்றவரல்லர்; ஆனால் இப்பொழுது அவர்கள் நடத்தப்படும் மாதிரியைப் பற்றி அதிருப்தி யடைந்திருக்கிறார்களென்றார். உயர்ந்த ஜாதியார்கள் கூட சேவகவிருத்தியில் நுழைந்து செந்தலைச் சேவகராய் (லால்பாடி போலீஸ்) ஊழியம் செய்யும்படி நேர்ந்தது எதனால்? அன்னத்துக்கு அபாவ மேற்பட்டதினால்தானே! சுதேசியம் தழைத்தோங்குமாயின், இப்பொழுது சேவகாவிருத்தியிலிருப்பவர்களே இந்தக்குலாமிஅல்லதுஅடிமைத்தொழிலை விட்டு வர்த்தகமுதலியவற்றிற் பிரவேசிப்பர். அப்பொழுது தலைகளை உடைப்பதற்கு ஒரு லத்தி (கம்பு தடி) யும் இராதென்றார். பிறகு உபந்நியாசகர் கடைக்காரரரைப்பார்த்து, இதுவரையில் ஜனத்தலைவர்கள் சொன்னதை ...ாம் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு இனியும் சீமைச்சரக்குகளை வாங்கி வர்த்தகம் செய்வீர்களோவென்றார்; அவர்களுட்சிலர் தங்கள் வைராக்கியத்தைக் காரியத்திற் காட்டுவோமேயன்றி, பேசசால் வெளியிட இஷ்டமில்லை யென்று சொன்னார்கள். அந்தச்சமயத்தில் வழக்கமாகக்கடைகளில்சாமான் வாங்கும் வாடிக்கைக்காரர்கள் சிலர் எழுந்து இந்த வர்த்தகர்கள் இப்பொழுது தங்களிடத்திலுள்ள சீமைச சரக்குகள்செலவழிந்துபோனபிற்பாடு மறுபடியும் அந்ய சரக்குகளை இறக்குமதி செய்யும்பட்சத்தில் அவர்களை பஹிஷ்கரிப்போம் என்று பயமுறுத்தினார்கள். இந்த பயமுறுத்துதலைக்கேட்டுச சபையோர் சாலவும் சந்தோஷித்தார்கள். பிறகு உபந்யாஸகர் கடைக்காரர்களை நோக்கி, இன்று நீங்கள் விசுவகர்மாவின் முன் செய்துகொண்ட பிரதிக்ஞையை மறவாமல் ஞாபகத்தில் வைக்கவேண்டுமென்றும், அதைப்பக்தி சிரத்தையோடு நிறைவேற்றவேண்டுமென்றும் சொன்னார். இப்பொழுது தசரா பூஜைவரப்போகிறது, இந்தசசமயத்தில் விபின்சந்திரபாபு பிரசன்னமாயிருந்தால் பஹிஷ்கார முறை யெவ்வளவோ பிரபலமாகும். அப்படிக்கில்

வாமல் அவருக்குச் சிறைச்சாலை வாசம் நேர்ந்ததைப்பற்றித் தம் விசனத்தை உணர்த்தினர் என்றாலும், விபின்சந்திரபாபு இல்லாவிட்டாலும் அவரது வேலையை ஏற்றுக்கொள்ள இதரர்கள் இருக்கிறார்களென்றும், இப்படிப்பட்ட சிறைச்சாலைத் தண்டனைகளால் 'சுதேசியம் அடங்கிப்போய்விடுமென்று கருதுவது பிழையென்றும்' அப்படிக்கின்றி இந்தத் தண்டனைகளே சுதேசியத்தை அதிகமாகப் பாவச்செய்து வருகின்றனவென்றும்; தண்டனைகள் அதிகமாக ஆக சுதேசியத்தின் வெற்றி மேன்மேலும் விர்த்தியாகுமென்றும் சொன்னார். இவ்வாறு இப்பெருங்கூட்டத்தின் நடவடிக்கைகள் நடந்தேறின. இந்த மீட்டிங்கு நடந்தபிறகு கடைத்தெருவில் ஒரு ஜாத்திரை நடந்தது.

சுதேசமித்திரன்.

# சமாசாரக்கொத்து.

லாகூரில் பஞ்சம்:— லாகூரில் திடீரென்று விலைவாசி உயர்ந்துவிட்டது. இவ்வருஷம் பலமான பஞ்சம் உண்டாய் விடுமென்று ஜனங்கள் பயப்படுகிறார்கள்.

* * * *

## இந்தியாவில் குருடர்கள்.

இந்தியா முழுவதிலும் கணக்கெடுத்துப் பார்க்க மொத்தத்தில் 33-கோடி ஜனங்கள் இருப்பதாகக் குறிப்பிடப்படுகின்றது. அவர்களில் ஐம்பது லட்சம் உணரயில் பிறவியிலேயோ அன்றி வயதுகாலத்திலேயோ குருடர்களாகவிருக்கிறார்களாம். இனிச் செவிடர்களுக்கும் ஊமையர்களுக்குந்தான் கணக்கெடுக்கவேண்டும் போலும்.

* * * *

வங்காள சுதேச தனசாலை:— கல்கத்தாவில் ஒரு சுதேச தனசாலை ஸ்தாபிக்கவேண்டுமென்று பாபு சுரேந்திரநாத் பானர்ஜி பெருமுயற்சி செய்துகொண்டு வருதல் முன்னமே தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்தத்தனசாலை சென்ற வியாழக்கிழமை யன்று ஸ்தாபிக்கப்பட்டு ரிஜிஸ்தரும் செய்யப்பட்டுவிட்டது. இதற்கு முதல் 50-லக்ஷம் ரூபாய். தர்பங்கா மகாராஜா மைமன்ஸிங் மகாராஜா, இராஜா ஸ்ரீ ராததாஸ் முதலிய எட்டுக் கனவான்கள் டைரக்டர்களாயிருக்கிறார்கள்.

• • • •

## ஒருபாம்பு

நெப்ராஸ்கா வென்னுமிடத்தில் ஒரு குளத்தின் கரையில் சென்ற 25 வருஷகாலமாக ஒரு பெரும் பாம்பு வசித்துக்கொண்டிருப்பதாய் ஒரு பிரஸ்தாபம் ஜனங்களுக்குள் இருந்து வந்தது. இப்பொழுது அந்தப் பாம்பு வெளியேறிவந்து ஒரு மனிதனைத் தூக்கி 20 அடி தூரத்திற்கப்பால் வீசி எறிந்துவிட்டதாம். இப்பாம்பின் நீளம் சுமார் 40 அடி அதாவது 13 கெஜத்துக்கு மேலிருக்குமாம். தலை ஒரு பெரிய கூடையவ்வளவிருக்குமாம். இதனால் ஜனங்களெல்லாம் திடுக்கிட்டிருக்கின்றார்கள். அதன்பின் அதைக் கொல்லுவதற்கென்று ஒரு சேனை தயார் செய்யப்படுகின்றதாம்.

* * * *

## "சந்தியா" வேடிக்கை.

"சந்தியா" பத்திரிகையின் பத்திராதிபர் மானேஜர். அச்சுக்கூடக்காரர் ஆகிய இவர்கள் கோர்ட்டுக்குப் போகும்பொழுது கல்யாண வேஷம் போட்டுக்கொண்டுபோனார்கள். ஆனால் இந்தக் கல்யாணத்துக்குப் பெண் யார் என்று தெரிவிக்கப்படவில்லை. அஃதாவது "சந்தியா" பத்திராதிபர் முதலிய மூவர்களும் மாப்பிள்ளை வீட்டுக்காரராக இருந்ததும் காணாமல் மாஜிஸ்திரேட் கிங்ஸ்போர்டையே பெண்ணாக ஏற்படுத்திக் கொண்டார்களாம்! அது பற்றித்தான். இவர்களெல்லாரும் கோர்ட்டைப் பெண்வீடாகவும், மாஜிஸ்திரேட்டைப் பெண்ணாகவும் விசாரணையைக் கல்யாணமாகவும் பாவித்து அன்றுதினம் ஊர்வலமாகச் சென்றார்கள் என்று ஒரு பத்திரிகை வாயிலாய் வெளியாகின்றது.

* * * *

## ஒரு புல் நூல் (Botany)

புல் பூண்டு மரஞ்செடிகளின் இயல்பைப்பற்றிய சாஸ்திரமாகிய புல்நூல் (Botany) விஷயமாய் இதுவரையும் வெளிவராத ஒரு பெரிய புஸ்தகம் தென் அமெரிக்கா பிரேஸிலியன் கவர்ன்மெண்டாரால் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. இது 130 பாகங்கொண்ட 40 புத்தகங்களாகச் செய்யப்பட்டிருக்கின்றது. இதில் மொத்தம் 20.733 பக்கங்களிருக்கின்றன. இதில் சுமார் 40.000 பூண்டுகளைப்பற்றிய விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்நூல் 1819-ஆம் வருஷத்தில் தொடங்கப்பட்டு இப்பொழுது சமீபத்தில்தான் முடிவுபெற்றது. அஃதாவது சென்ற சுமார் 90 வருஷகாலமாய் எழுதப்பட்டுக்கொண்டிருக்கின்றது. இதை இயற்றிய சிறந்த கருத்தாக்கள் 65 பேர்கள். இதை முதல் முதல் எழுதத்தொடங்கியவர் மார்ட்டியஸ் என்ற ஒருவராம்.

## மிஸ்டர் கெய்ர் ஹார்டி

பிரிட்டிஷ் பார்லிமெண்டு மெம்பரும் இந்தியா நண்பருமாகிய மிஸ்டர் கெய்ர் ஹார்டி கல்கத்தாவுக்கு வந்திருக்கிறார். அவர் அங்கே அநேக கனவான்களுக்குப் பேட்டி கொடுத்ததுமன்றி இந்தியா சம்பந்தமான அநேக விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். அந்த விவரங்களைப்பற்றிப் பத்திரிகைகளிலெல்லாம் வெகுவாய்ப் பேசப்படுகின்றது. இவர் சில தினங்களுக்கு முன் பாபு சுரேந்திரநாத் பானர்ஜியின் "வங்காளி" பத்திரிகையின் ஆபீஸுக்குச் சென்று வெகுநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு அதன் பின் கல்கத்தாவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் "இந்தியன் ஸ்டோர்ஸ்" என்னும் சுதேச பண்டசாலைக்குப்போய் அங்குள்ள பலவிதமான சாமான்களைப்பார்வையிட்டு இந்தியாவின் பற்பல கைத்தொழில்களைப் பற்றி மேற்படி பண்டசாலை மானேஜருடன் ஒருமணிநேரம் பேசிக்கொண்டிருந்தார். இவர் எல்லாரிடமும் மிகவும் மரியாதையாயும் தயவாயும் பேசுவதோடு நிஷ்கபடமான சுத்த இருதயமுடையவராய் விளங்குகின்றாராம்.

* * * *

## ஸ்ரீ அம்பிகா சரணர் B. A, M. E.

இந்தியாவிலிருந்து அநேக மாணாக்கர்கள் ஜப்பானுக்குப்போய்ப் பலவித கைத்தொழில் படித்து வருகின்றார்கள். ஆயினும் ஒருவராவது ஜப்பான் (யூனிவர்சிட்டி) சர்வகலாசாலைகளிலே வித்யா பட்டங்கள் பெறவில்லை. கல்கத்தாவிலிருந்து சென்ற ஸ்ரீ அம்பிகா சரண என்னும் மாணாக்கர் ஜப்பான் கியோட்டோ சர்வகலாசாலையில் M. E. (எம் ஈ. Master of Engineering) என்னும் பட்டம் முதல் முதல் பெற்றார். இவர் கல்கத்தா சர்வகலாசாலையில் 1901-ஆம் வருஷத்தில் B. A. பரீக்ஷை தேறிவிட்டு 1904-ஆம் வருஷம் செப்டம்பரில் ஜப்பானுக்குச் சென்று கியோட்டோ இம்பீரியல் யூனிவர்சிட்டியைச்சேர்ந்து M. E. பரீக்ஷைக்கு வாசித்து அங்கே அப்பரீக்ஷையில் முதல்வராய்த் தேறினார். ஜப்பானிய கல்வி யதிகாரிகள் இவருடைய புத்திக் கூர்மையை மெச்சி இவருக்கு ஒரு சம்மானப்பதக்கம் கொடுத்ததுமன்றி இவரை மிகவும் புகழ்ந்து பேசினார்கள். ஜப்பான் பத்திரிகைகளெல்லாம் இவருடைய படத்தையும் இவருடைய விவேகத்தைப்பற்றிய அபிப்பிராயங்களையும் வெளியிட்டன. இவர் சென்றமாதம் 24-ஆம்தேதியே ஜப்பான்விட்டுப் புறப்பட்டு விட்டார். அநேகமாய் இம்மாதம் முடிவுக்குள் கல்கத்தா வந்து சேருவார்.

* * * *

நகரும் கோயில் :— நடைவிணாறுபோன்ற யுக்தி செய்ததாகத் தென்னாலிராமன் காலத்தில் கதாரூபமாக நம்மவர் படித்திருப்பார்கள். அதைப் போலவே அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களைச்சேர்ந்த சிகாகோ பட்டணத்தில் ஒரு சிறிய பிரார்த்தனைமந்திரமானது கட்டப்பட்டிருக்கின்றது. அதன் நீளம் 75-அடி அதனுள் குருவானவர் உட்கார்ந்து பெருத்த தனிகர்களின் வீட்டுவாசல்களிற் கொண்டுபோய் நிறுத்தித் தனிகர்களின் குடும்பத்தவரை நகரும் கோவில்களில் வந்து தொழும்படி செய்கிறார்கள். இந்த நகர்கின்ற கோயில்போல் இதர பட்டணங்களிலும் பிரார்த்தனை மந்திரங்கள் செய்ய இப்போது ஏற்பாடாய்க் கொண்டிருக்கிறதாம்.

* * * *

ஓர் நவீன ஆலயம்.- பல்லாரிஜில்லா ஹோஸ்பேட்டைத் தாலூகா ஹம்பி கிராமத்தில் பழைய கட்டிடமொன்று வழியால் நிலத்துக்குள் பெரிய கோவில் அகப்பட்டிருக்கிறது. அது 2 பர்லாங்கு வரையிருக்கிறது. அக்கோவிலில் பிரதிமையுண்டு த்வஜஸ்தம்பம் மிகவும் பெரிது. மேலும் அநேக் மண்டபங்களும் மகாத்வாரங்களு மிருக்கின்றன. இவ்வாலயத்தைச் சீர்படுத்தச சற்றேறக்குறைய 600 கூலியாட்கள் வேலை செய்து வருகிறார்கள். இது சர்க்காரார் கவனத்திலிருக்கிறது. இக்கோவில் பூர்வகாலத்தில் பௌத்தமதத்தவருடையதாயிருக்கலாம். இதைவிடச சிறந்த பௌத்தராலயம் இம் மைசூர் பிராந்தியத்தில் "சிராவணப்வகுலா" என்று சொல்லப்படும். இது மிக்க வேலைத்திறமைத்யோடு சித்திர விசித்திரமா யிருப்பதைக் கண்டோர் அதிசயிப்பார்கள்.

* * * *

பசு:—சாதாரணமாய் பசுமாடு கிராமங்களில் வெளியே கட்டப்படுகிறது. பேட்டைகளில் வீட்டுத் தாழ்வாரத்திற் கட்டுவார்கள். மாடு இருக்கும் இடம் மூத்திர நாற்றமடிக்கும். இவ்விடங்களில் பால் கறந்தால், பால் நாற்றத்தைக் கிரகிக்கிறது. அப்பால் குழந்தைகளுக்கு நல்லதன்று. மாடு குளிரிலும் மழையிலும் அடிபட்டால் அதன் பால் பாதியிலொருபாகம் குறைவதுமல்லாமல் தைலப் பசையும் குறைகிறது.

கறக்கும்போது பால் சூடாறுதமுன் சாப்பிடசீக்கிரம் ஜீரணமாகிறது. சுண்டக் காய்சசின பாலைச சாப்பிட 100-க்கு 8-பாகம் ஜீர்ணமாகாமற் போகிறது. பால் திரவமாயிருப்பதால் அதில் உள்ள சத்து முழுவதும் ஜீர்ணமாகும் ஸ்திதியில் இருக்கவேண்டும். அதிகமாய் ஒரேதரமாய்ப் பாலைச சாப்பிடுவதற்குப் பதில் கொஞ்சக் கொஞ்சமாய்ச சாப்பிட ஜீரணம் அதிகமாகிறதென்று தெரிகிறது.

உ

# மதுரை

# தர்ம சாஸ்திர சபை.

1. இச்சபை 1894-ம் ௵ ஸ்தாபிக்கப்பெற்று நன்கு நடைபெற்று வருகின்றது.

2. இச்சபையின் நோக்கங்களும் கருத்துக்களும் அடியில் வருமாறு:—

(1) ஆரியர்களுடையவும் அவர்களின் ஜநசமுதாயத்தினுடையவும் சீலத்தையும் ஒழுக்கத்தையும் மேன்மேலும் அபிவிருத்தி செய்தலும் பரிபாலித்தலும்.

(2) உபநிஷத்துக்கள், வேதங்கள், ஆகமங்கள், ஸ்மிருதிகள், புராணாதிகள், இவைகளின், ஞானத்தை,

(a) உபந்நியாசங்கள் மூலமாகவும் படங்கள் மூலமாகவும்

(b) மேற்கண்ட விஷயங்களில், அபிக்ஞர்களென்று தெரிந்தெடுக்கப்பட்ட வித்துவான்களுக்கும், இந்த ஜநசமூக சம்பந்தமான வித்தியார்த்திகளுக்கும், ஸம்பாவனை கொடுத்தல் மூலமாயும்.

அபிவிருத்தி செய்தலும் பரவச்செய்தலும்.

3. இச்சபையின் மேற்கண்ட கருத்துக்களில் அபிமானமுள்ள பிராமணர் யாரும் இச்சபையின் அங்கத்தினராக ஆகலாம்.

4. சபையின் அங்கத்தினர்கள் சாதாரண அங்கத்தினரென்றும், கௌரவ அங்கத்தினரென்றும், இருவகுப்பினராவர். சாதாரண அங்கத்தினர் ௴ 1-க்கு 8 அணாவுக்குக் குறையாமல் சந்தாக் கொடுக்க வேண்டியது. ஆனால் அதைத் [illegible] அணாவாகக் குறைக்கும்படி கேட்

டுக்கொள்ளுகிறவர்களிடமிருந்து, குறைந்த சந்தாவாக [illegible] அணா
தயவாக வசூலிக்கப்படும். கௌரவ அங்கத்தினர்கள் சந்தா கொ
டுக்கவேண்டியதில்லை.

## 1907 ௵த்துக்கு உத்தியோகஸ்தர்கள் வகையறா.

### நிருவாக சபையார்.

1. ப. நாராயணையர்—அக்கிராசனாதிபதி.
2. பி. எஸ். சுப்பிரமணியஐயர்—உப அக்கிராசனாதிபதி.
3. என். நடேசஐயர்—காரியதரிசி.
4. வி. எஸ். ராமசுவாமி சாஸ்திரி—உதவிக்காரியதரிசி.
5. பி. வெங்கடேசுவரஐயர்—பொக்கிஷதார்.
6. எஸ். ராமசுவாமிஐயர்
7. கொடுமங்கலம் சுப்பிரமணியஐயர்

### ஆலோசனை சபையார்.

1. வி. சுவாமிநாதஐயர்—சபாநாயகர்.
2. பி. எஸ். சுப்பிரமணியஐயர் ,,
3. என். நடேசஐயர் ,,